# ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பு

## (D.El.Ed.)

### பாடப்பிரிவு 501

## இந்தியாவில் தொடக்கக்கல்வி
## சமூக – கலாச்சார நிலை

*தொகுதி 3*

***இந்தியாவில் தொடக்கக் கல்வி : சமகாலத்திய சூழமைவு* - II**


**தேசிய திறந்த நிலைப் பள்ளி நிறுவனம்**

(MHRD கீழ் செயல்படும் தன்னாட்சி நிறுவனம், இந்திய அரசு)

A 24-25, நிறுவனத்தின் அமைவிடம், கிளை - 62, நொய்டா 201309. (உ.பி.)

**www.nios.ac.in**

நன்மதிப்பு புள்ளிகள் 4 (3 + 1)

| தொகுதி | அலகு | அலகின் தலைப்பு | கோட்பாடு ஆய்வு | | செய்முறை ஆய்வு |
|---|---|---|---|---|---|
| | | | உள்ளடக்கம் | செயல் திறன் | |
| தொகுதி 1 இந்தியாவில் தொடக்கக் கல்வி : ஓர் மீள்பார்வை | அலகு 1 | இந்தியக் கல்வி முறை - I | 4 | 2 | குரு குலத்தில் இருந்த குருவையும் தற்போதுள்ள ஆசிரியரையும் ஒப்பீடு செய்தல் |
| | அலகு 2 | இந்தியக் கல்வி முறை - II | 5 | 3 | NCF 2005-ன் படி எந்த எந்த பாட புத்தகத்தையும் மதிப்பீடு செய்யும் உரிமை |
| | அலகு 3 | கல்வி ஒரு அடிப்படை உரிமை | 4 | 2 | 2009 RTE சட்டத்தின் படி ஆசிரியரின் பங்கும் பொறுப்புகளும் |
| | அலகு 4 | அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கான (UEE) நிறுவன அமைப்பு | 4 | 2 | ஜார்கண்டில் உள்ள தொடக்கக் கல்வியின் அமைப்புமுறை |
| தொகுதி 2 இந்தியாவில் தொடக்கக் கல்வி : சமகாலத்திய சூழமைவு-I | அலகு 5 | அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கான அணுகு முறைகள்-I | 5 | 3 | |
| | அலகு 6 | அனைவருக் தொடக் தொடக்கக் கல்விக்கான அணுகு முறைகள்-II | 5 | 3 | பள்ளியில் மதிய உணவு திட்ட அனுபவம் |
| | அலகு 7 | அனைவருக் தொடக் கக் கல்விக்கான திட்டமிடல் மற்றும் மேலாண்மை | 6 | 3 | |
| தொகுதி 3 இந்தியாவில் தொடக்கக் கல்வி : சமகாலத்திய சூழமைவு-II | அலகு 8 | தொடக்கக் கல்விக்கு ஆசிரியர்களை உருவாக்குதல் | 6 | 3 | ஒரு சிறந்த ஆசிரியராக தங்களுடைய பண்புகளை ஆய்வு செய்தல் |
| | அலகு 9 | பின்தங்கிய மாணாக்ர்களுக்கு கல்வி | 5 | 3 | உங்கள் பகுதியில் உள்ள SC/ST சிறுபான்யினர் குழந்தைகளின் பிரச்சனைகள், அணுகுதல் மற்றும் அவர்களை தக்க வைத் தல். குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்க உங்கள் பள்ளியில் உங்களுடைய எதிர் கால திட்டம் |
| | அலகு 10 | தொடக்கக்கல்வி பற்றிய பன்னாட்டு பார்வவகள் | 5 | 2 | |
| | | பயிற்சி | 15 | | |
| | | மொத்தம் | 64 | 26 | 30 |
| | | ஆக மொத்தம் | 64 +26 + 30 = 120 மணிகள் | | |

# *தொகுதி 3*

# இந்தியாவில் தொடக்கக் கல்வி : சமகாலத்திய சூழமைவு - II

## அலகுகள்

*அலகு 8* தொடக்கக் கல்விக்கு ஆசிரியர்களை உருவாக்குதல்

*அலகு 9* பின்தங்கிய மாணவர்களுக்கு கல்வி

*அலகு 10* தொடக்கக்கல்வி பற்றிய பன்னாட்டு பார்வைகள்

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| அலகு | *8* | தொடக்கக் கல்விக்கு ஆசிரியர்களை உருவாக்குதல் | *1* |
| அலகு | *9* | பின்தங்கிய மாணவர்களுக்கு கல்வி | *39* |
| அலகு | *10* | தொடக்கக்கல்வி பற்றிய பன்னாட்டு பார்வைகள் | *67* |



குறிப்புகள்

# 8. தொடக்கக் கல்விக்கு ஆசிரியர்களை உருவாக்குதல்

## அமைப்பு


8.0 முன்னுரை

8.1 கற்றல் நோக்கங்கள்

8.2 ஆரம்ப கல்வியின் தொடக்க மற்றும் உயர் தொடக்கக் கற்றல் கற்பித்தல் நிலைகள் மற்றும் பிரச்சினைகள்

8.3 பள்ளிக்கல்வியில் தொடக்க, உயர்தொடக்க நிலைக்கான ழிசிதி 2005ன் முக்கிய பகுதிகள்

8.3.1 NCF 2005ன் முக்கிய சாராம்சங்கள்

8.3.2 ஆசிரியர் பணிமுன் பயிற்சி

8.3.3 ஆசிரியர் பணியிடைப் பயிற்சி

8.3.4 ஆசிரியர் பயிற்சிக்கான சிறப்புத் தேவைகள்

8.3.5 தொடக்கமற்றும் உயர் தொடக்க நிலை வரையிலான ஆசிரியர் கல்விக்கான கலைத்திட்டம்

8.3.6 ஆசிரியர் பயிற்சிக்கான நிறுவன உள்கட்டமைப்பு

8.3.7 ஆசிரியர்கள் தேர்வு முறை

8.4 உயர் தொடக்கக் கல்வி ஆசிரியர் கல்விக்கான தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு (2009-2010)ன் முக்கிய சாரம்சங்கள்

**நிலை-1: தொடக்கக்கல்விக்கான ஆசிரியர் கல்வி (வகுப்பு 1 முதல் 5 வரை)**

8.4.1 அடிப்படைக் காரணங்கள்

8.4.2 பாடத்திட்டம்

8.4.3 பயிற்சிகள்

8.4.4 கலைத்திட்ட பரிமாற்றம்

8.4.5 ஆசிரியப் பயிற்றுநர்களின் பங்கு

8.4.6 மதிப்பீடு

8.4.7 மதிப்பீட்டுக் கருவிகள்

**நிலை-2: உயர் தொடக்கக் கல்விக்கான ஆசிரியர் கல்வி (வகுப்பு 1 முதல் 8 வரை)**

8.4.8 அடிப்படைக் காரணங்கள்

8.4.9 பாடத்திட்டம்

8.4.10 பயிற்சிகள்

8.4.11 கலைத்திட்ட பரிமாற்றம்

8.4.12 ஆசிரியப் பயிற்றுநர்களின் பங்கு

8.4.13 மதிப்பீடு

8.4.14 மதிப்பீட்டுக் கருவிகள்

8.5 தொடக்க ஆசிரியர் கல்வி மாதிரிகள் மற்றும் ஒருங்கிணைந்த மாதிரிகள்

8.5.1 தொடக்க ஆசிரியர் கல்வியின் இன்றைய நிலை

8.5.2 தொடக்க ஆசிரியர் கல்வியை மேம்படுத்துதல்

8.5.3 புதிய கற்பித்தல் மாதிரிகளுக்கான தேவை

8.5.4 புதிய அணுகுமுறைகள்

8.6 ஆசிரியர் ஒரு ஆழ்ந்த சிந்தனை பயிற்சியாளர்

8.6.1 ஆழ்ந்த சிந்தனையின் பொருள்

8.6.2 ஆழ்ந்த சிந்தனை பற்றியகல்வியாளர்களின் கருத்துக்கள்

8.6.3 ஆழ்ந்த சிந்தனை பயிற்சியின் நோக்கம்

8.6.4 ஆழ்ந்த சிந்தனை: உணர்வுகளுடன் கூடியஅனுபவம்

8.6.5 ஆழ்ந்த சிந்தனையின் நவீன கருத்து

8.6.6 சிட்ச்னர் மற்றும் லிஸ்டன் (Zeicher and Liston's)ன் ஆழ்ந்த சிந்தனை மாதிரி

8.6.7 ஆழ்ந்த சிந்தனை முறைகள்

8.7 சுருக்கம்

8.8 அருஞ்சொற்பொருள்/ விரிவாக்கம்

8.9 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள் மற்றும் மேற்கோள் நூல்கள்

8.10 அலகுப் பயிற்சிகள்



குறிப்புகள்

## 8.0 அறிமுகம்

முந்தைய அலகில் இந்தியாவில் உள்ள கல்வி முறை பற்றியும், பல்வேறு நிலைகளில் கல்வி வழங்கும் நிறுவனங்களை பற்றியும் அறிந்தோம். மேலும் கல்வி என்பது அனைவரின் அடிப்படை உரிமை என்பதை கண்டோம். கல்வி உரிமை சட்டம் (RTEAct 2009) குழந்தைகளுக்கு 14 வயது வரை இலவச கட்டயாக்கல்வியை வலியுறுத்துகிறது. இலவசக் கட்டயாக்கல்வி 1 முதல் 8ம் வகுப்பு வரை ஆகும். இது தொடக்க, உயர் தொடக்க கல்வி என்ற இரு நிலைகளையும் உள்ளடக்கியது. இது (UEE) அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற இலக்கை அறிவுறுத்துகிறது.

இந்த அலகு ஆசிரியர் கல்வியின் அடிப்படையை விவரிக்கின்றது. ஆசிரியர் கல்வி அமைய அடிப்படை அம்சங்கள் என்ன? தரமான கல்வி தரும் தரமான ஆசிரியர்களை எப்படி உருவாக்குவது? போன்ற விசயங்களை இந்த அலகில் விளக்கமாக காண உள்ளோம்.

## 8.1 கற்றல் நோக்கங்கள்

இந்த அலகை படித்து முடித்தவுடன், நீங்கள்

- ஆரம்ப கல்வியின் தொடக்க மற்றும் உயர் தொடக்க நிலைகளில், கற்பித்தல் முறைகளிலுள்ள பிரச்சனைகளையும், அவை சார்ந்த விவரங்களையும் அடையாளம் கண்டு கொள்வீர்கள்.
- ஆரம்ப கல்வியில் உள்ள ழிசிதி 2005 ன் முக்கிய பகுதிகளை பற்றிய காரணங்களை அறிவீர்கள்.
- ழிசிதி 2005ல் உள்ள முக்கிய பிரச்சினைகளையும் அதற்கான காரணங்களையும் தொடர்பு படுத்த இயலும்.
- ஆரம்ப கல்விக்கான NCFTE 2009-10ன் முக்கிய சாராம்சங்களை அறிந்து கொள்ள இயலும்.
- வெவ்வேறு வகையான கற்றல் கற்பித்தல் முறைகளுக்கான தேவைகளை அறிந்து கொள்வீர்கள்.
- ஆழ்ந்த சிந்தனைப் பயிற்சியுடன் (Reflective Practice) தொடர் புடைய பல்வேறு கருத்துக்களையும் பகுத்தாராய்வீர்கள்.
- ஆழ்ந்த சிந்தனைப் பயிற்சியாளர் (Reflective practioner) ஆக நீங்கள் செயல்பட விளைவீர்கள்.

குறிப்புகள்

## 8.2 ஆரம்ப கல்வியின் தொடக்க மற்றும் உயர் தொடக்க நிலைகளின் கற்றல் கற்பித்தல் முறைகளிலுள்ள பிரச்சனைகள்

கல்வியில் உள்ள முக்கிய பின்னடைவு பால், சாதி, மதம், இனம் மற்றும் கலாச்சாரம் சார்ந்த கல்வி. இந்த வேறுபாடுகள் முற்றிலும் அழிக்கப்பட்டு கல்வி அனைவருக்கும் சமம் என ஆக்கப்பட வேண்டும்.

இது அரசியல் வாயிலாக மட்டும் சரிபடுத்த இயலாத ஒன்று. முன்பருவ கல்வி, தொடக்கக்கல்வி தொட்டு அனைவருக்கும் உணர்த்தப்பட வேண்டும். கல்விஅமைப்பு, கற்பித்தல் முறைகள், பாடப்பொருள் அனைத்தும் இதை உணர்த்தும் வகையில் இருத்தல் வேண்டும்.

அனைவருக்கும் தொடக்கக் கல்வியில் நமது கலாச்சார மேன்மை உணர்த்தப்பட்டது. கலாச்சாரங்கள் பலவற்றை நாம் கொண்டிருந்தாலும், வேற்றுமையில் ஒற்றுமை நிலைநிறுத்தப்பட்டது.

மேலும் சுயமதிப்பு, மதிப்புகள் (Values) மற்றும் மாணவர்களின் ஆக்கச்சிந் தனையை மேம்படுத்தும் முயற்சிகள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது கீழ்காணும் அம்சங்கள் ஆரம்பக்கல்வி ஆசிரிய கல்வியில் முக்கிய பங்கு பெறுகின்றன.

### • கலைத்திட்ட வடிவமைப்பு

கலைத்திட்ட வடிவமைப்பில் புதிய வளர்ச்சிகள், அம்சங்கள் இணைக்கப்பட வேண்டும். அனைத்து குழந்தைகளும் சுயமதிப்பு, தன்னம்பிக் கையுடன் கல்வி கற்க வேண்டும். இடைநிற்றலின்றி கல்வியை தொடர்ந்து கற்று பூர்த்தி செய்திட வேண்டும். சமூக, பொருளாதார வேறுபாடுகளின்றி கற்க வேண்டும். உடல், உள்ளம் மற்றும் ஆன்மாவை வளர்ச்சி பெறச் செய்யும் உண்மையான கல்வி வேண்டும். மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை கல்வி வளர்க்க வேண்டும்.

### • கல்வி அமைப்பில் சீர்திருத்தம்

தற்போதைய கல்வி மாணவர்களின் மனப்பாடத்தை மட்டுமே அடிப்படையாக கொண்டுள்ளது. மனப்பாடம் செய்து மதிப்பெண்களை பெறும் அமைப்பாகவே தற்போதைய கல்வி உள்ளது. மாணவர்களிடம் ஆக்கச் சிந்தனையைத் தூண்டி புதியன படைக்கும் ஆற்றலை வளர்க்கவில்லை. குருட்டு மனப்பாடம் செய்து அதிக மதிப்பெண்ணை பெறும் கல்வியே உள்ளது. பொருள் புரிந்து மாணவர்கள் படிப்பதாக

இல்லை. சமூகமும், குருட்டு மனப்பாடம் மூலம் அதிக மதிப்பெண்கள் பெறும் முறையையே விரும்புகிறது. இது மாற்றப்பட வேண்டும். மாணவனின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு வித்திடுவதாக கல்வி இருக்க வேண்டும். மாணவர்கள் சமூக, உடல், மனம் மற்றும் அறிவார்ந்த திறன்களை வளர்ப்பதாக கல்வி அமைய வேண்டும். நமது கலாச்சாரத்தை போற்றி காப்பதாகவும், தனி மனித மதிப்புகளை வளர்ப்பதாகவும் அமைய வேண்டும். மேற்காண் குணங்களுடன் மாணவன் தன் தனி மனித வாழ்விலும், சமூக வாழ்விலும் வெற்றி பெற கல்வி உதவ வேண்டும். இதுவே கல்வியின் பயன்.

## • பஞ்சாயத்துராஜ் நிறுவனங்கள்

பஞ்சாயத்துராஜ் நிறுவனங்கள் கீழ்வரும் தன்மைகளை வழங்குகின்றன.

- அதிகார குவிப்பு இல்லா அமைப்புகள்.
- ஆசிரியர்களுக்கு அதிகமாக பொறுப்புகள்
- பள்ளிகளுக்கு அதிக சுதந்திரம் மற்றும் தன்னாட்சி
- மாணவர்களின் தேவையை முழுமையாக பூர்த்தி செய்யும் கடமை
- பஞ்சாயத்து ராஜ் அதிகாரப் பரவலையும், உள்ளாட்சி நிர்வாகம், உள்ளாட்சி அதிகாரம் என்பனவற்றை வலியுறுத்துகிறது. இதைப்போலவே பள்ளியும் கருதப்படுவதால், மாணவர்கள் சமூக திறன்களை பெற்று, தனி திறன்களை வளர்த்துக்கொண்டு சமூகத்தோடு முழு திறன்களை பெற்று இணைந்து வாழ கற்கின்றனர்.
- ஏற்படும் சந்தேகங்களுக்கு ஆசிரியர்களிடம், போதிய விளக்கங்கள் பெற்று தங்கள் படைப்பாற்றலையும் வளர்த்து கொள்கின்றனர்.

இது **"தெரிந்ததிலிருந்து தெரியாதது"**

**"கண்ணுக்குப் புலனாகும் பொருள்களிலிருந்து**

**கண்ணுக்குப் புலனாக பொருள் வரை"**

மேலும் **"அருகாமையிலிருந்து அண்டம் வரை"** என சரியான முறையில் கற்க, வழி வகுக்கிறது.

## • திறனாய்வு கற்பித்தல் அணுகுமுறைகள்

சமூகத்தை வளப்படுத்தவும், முன்னேற்றத்தை நோக்கி கொண்டு செல்லவும் பொருத்தமான கற்பித்தல் முறைகள் தேவை. வளமான சமூக மாற்றத்தை

ஏற்படுத்துவதாக அவை அமைய வேண்டும். மாணவர்களின் தனித்திறன்களை வெளிக்கொணர்ந்து, ஆக்கச்சிந்தனையை வளர்த்து, முழு ஆளுமை வளர்ச்சிக்கு அடி கோலுவதாக அது அமைய வேண்டும்.

புதிய கற்பித்தல் அணுகுமுறை என்பது கற்றல் மற்றும் கற்பித்தலுக்கு இடையே நல்ல உறவு முறையை ஏற்படுத்த வேண்டும். அது தொடர்ச்சியான செயல்பாடுகளைக் கொண்ட கற்றல், மீளக்கற்றல், வாழ்வியல் பயன்பாடு மற்றும் மதிப்பீடுகளை உள்ளடக்கியது.

## • கலைத்திட்ட ம் சார்ந்த ஈடுபாடுகள்

### சுற்றுப்புறத்தை பாதுகாத்தல்

இன்றைய நவீன வாழ்க்கை முறையானது சுற்றுப்புறத்திற்கு கேடு விளைவிப்பதாக அமைந்துள்ளது. நவீன வழிமுறைகள் பயன் அளிப்பவையாக இருந்தாலும், அவை பெரும் கெடுதல்களையும் ஏற்படுத்துகின்றன. இவற்றிலிருந்து சுற்றுப்புறத்தை பாதுகாப்பது நமது முக்கிய கடமையாகும். சுற்றுப்புறத்தை காப்பாற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை ழிறிணி 1986 வலியுறுத்திக் கூறுகிறது. மேலும் மாணவர்களிடம் சுற்றுப்புறத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி, அதைப் பேணி காக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவது மிக முக்கியமான ஒன்றாகும். பள்ளி வாழ்க்கையையும், சமூக வாழ்க்கையையும் இணைத்து காட்ட வேண்டியதும் முக்கியமான ஒன்றாகும்.

### அமைதிக்கல்வி

நாம் உலக அளவில், தேசிய அளவில், மண்டல மற்றும் உள்ளூர் அளவில் ஒரு அமைதியற்ற சூழலில் வாழ்கிறோம். இவ்வாறான அமைதியற்ற சமூக, கலாச்சார அமைப்பு குழப்பம், கலகம், மனமுறிவு இவைகளையே ஏற்படுத்தும். நன்கு பண்படுத்தப்பட்ட தனி மனித முழு ஆளுமையே கலாச்சாரத்தை போற்றுவதாகவும், அமைதியை வெளிப்படுத்துவதாகவும் அமையும். கல்வியால் மட்டுமே ஒரு மனிதனை, தனி மனித பண்புகளில் மேம்பட்டவனாகவும் அமைதியை போற்றி பாதுகாப்பவனாகவும் மாற்ற இயலும்.

### குடியரசே வாழ்வின் வழி

இந்திய அரசியலமைப்பு நீதி, சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை அனைவருக்கும் உத்திரவாதத்துடன் சமமாக வழங்குகிறது. தனி மனித

குறிப்புகள்

சுதந்திரம் நமக்கு உரியது தான். ஆனால் அடுத்தவர்களின் தனி சுதந்திரத்திற்கும் நாம் மதிப்பு தர வேண்டும. தனி மனித சுதந்திரம் என்பது அடுத்தவர்களின் சுதந்திரத்தை சிதைப்பதல்ல. கல்வி என்பது சமூக மாற்றத்திற்கான கருவி. கல்வி மாணவர்களிடம் விருப்பு, வெறுப்பின்றி, மத வித்தியாசமின்றி அனைவரையும் மதிக்கும் மாண்பினை வளர்க்க வேண்டும். கலைத்திட்டமானது நமது பாரம்பரிய கலாச்சார மேன்மைகளைச் சிதைக்காமல், பழைய விசயங்களை மீளாய்வு செய்யவும், மறுமதிப்பீடு செய்யவும், புதிய விசயங்களை கொணரவும் வேண்டும். கல்வியானது தனது கடமைகளைச் செய்யவும், உரிமைகளைக் கோரவும் மேலும் நமது அரசியலமைப்பு சட்டத்தின் படி நடக்கும் நன் குடிமக்களை உருவாக்குவதாகவும் அமைய வேண்டும்.

## • கற்பித்தல் முறை சார்ந்த விஷயங்கள்

- கற்பித்தல் முறை சார்ந்த விசயங்கள் கலைத்திட்டத்தில் 80 சதவீத இடத்தை பெறுகின்றன. கலைத்திட்டமானது குழந்தை மைய கல்வியையும், செயல்வழிக் கற்றலையும், சக மாணவர் இணைந்து கற்றலையும் மிகவும் வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. பயிற்றுநரின் பாடப்பொருள் சார்ந்த அறிவினை மேம்படுத்துவதாக இருக்க வேண்டியது கலைத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.
- தரமான கல்வி என்பது மனிதனின் தரமான வாழ்க்கையை அனைத்து வகையிலும் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அமைதிக்கல்வி, குடிமகன்களுக்கான சுதந்திரம், சமூக மாற்றத்திற்கான முன் தயாரிப்பு போன்றவை தரத்தின் முதன்மை அம்சங்கள். பாடப்புத்தகங்களும், மற்ற பாடம் சார்ந்த பொருட்களும், ஏடுகளும் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியை நோக்கியும், மனித இனத்தின் சவால்களை சமாளிக்கும் விதத்திலும் அமைக்கப்பட வேண்டும். கலைத் திட்டத்திலுள்ள எந்த பாடமும் மேற்காண் நோக்கங்களிலிருந்து விலகி அமைதல் கூடாது. எனவே கலைத்திட்டத்தின் எந்த ஒரு பாடப்பகுதியும் மிகவும் கவனமாக வடிவமைக்கப்பட வேண்டும். நமது நாட்டின் உயரிய நோக்கங்களை நோக்கியும், சமூக, பொருளாதார, கலாச்சார மேன்மைகளை மேம்படுத்தும் வகையிலும் அவை வடிவமைக்கப்பட வேண்டும்.

குறிப்புகள்

## செயல்பாடு 1

கீழே உள்ள படங்களை பாருங்கள். படத்தில் உள்ள ஆசிரியர், நீங்கள் எனில் உங்களின் கருத்து என்ன?

படத்தில் உள்ள ஆசிரியரின் பேச்சு கருத்தை உங்கள் கருத்தாக மாற்றி எழுதவும்.

Picture 1



Picture 2



Picture 1




Picture 2




## தொகுப்புரை

திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கு கீழ்கண்ட கருத்துக்கள் தேவைப்படுகின்றன

- வகுப்பறை அறிவினை குழந்தைகளின் அனுபவங்களுடன் இணைத்தல்.
- அறிவினை வாழ்வின் பல்வேறு நிலைகளுடன் இணைத்தல்.
- கற்றலை குருட்டு மனப்பாட முறையிலிருந்து முற்றிலும் மாற்றுதல்.
- கலைத்திட்டம், பாடப்புத்தகத்தை அடிப்படையாக கொண்டதல்ல. அது மாணவர்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு அடிகோலுவதாக அமைய வேண்டும்.
- மதிப்பீட்டு முறை மிகவும் தரமுடையதாகவும், நெகிழ்வுடைய தாகவும், வாழ்வின் அடிப்படையாகவும் இருத்தல் வேண்டும்.
- தனி மனித சுதந்திர தன்மைக்கு அடிகோலுவதாகவும், வழிவகுப் பதாகவும் அமைய வேண்டும்.

- *சமூக, பொருளாதாரத்தில் நலிவடைந்த குழந்தைகள்: சமூக, பொருளாதாரத்தில் மேம்பட்ட குழந்தைகளிடம் இருந்து அறிவை, திறமையை பெற வேண்டும். சக மாணவர்களிடம் சாதி, சமய, இன வேறுபாடுகள் அற்ற சக மாணவர் கல்வி நடைபெற முழு வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.*

## 8.3 பள்ளிக்கல்வியில் தொடக்க உயர்தொடக்க நிலைக்கான NCF-2005ன் முக்கிய பகுதிகள்

*தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு (NCF 2005) பாடத்திட்டங்கள், பாடப்புத்தகங்கள் மற்றும் கற்பித்தல் முறைகளை இந்தியாவில் பள்ளிக்கல்வித்துறையில் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கான வளங்களை வழங்குகிறது. தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு 2005ன் தகவல்கள் (சான்றுகள்) முந்தைய அரசின் அறிக்கைகள் "சுமையற்ற கற்றல்" தேசியக் கல்விக்கொள்கை 1986, 1992 மற்றும் வழிநடத்தும் குழுவின் கலந்துரையாடல் அறிக்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்டது. அனைத்து கல்வித் துறைகளுக்கும், தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு 2005ன் கொள்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.*

### 8.3.1 தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு 2005ன் சாராம்சங்கள்

*தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு2005 தகவல்கள் ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.*



அனைவருக்கும் தொடக்கக் கல்வி (UEE) அளிக்கும் வகையில் இந்திய பாராளுமன்றத்தில் கல்வி உரிமைச் சரத்து, 2009 உருவாக்க சட்டம் இயற்றியது.

இதன் மூலம் 6-14 வயது வரை உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச கட்டாயக் கல்வி பெறும் உரிமை உள்ளது. இச்சட்டம் ஏப்ரல் 1, 2010 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

## தொடக்கக் கல்வியில் புதிய முக்கிய பகுதிகள் கூறுவன:

(i) அனைவரும் பள்ளிச் சேர்க்கை பெறுதல் மற்றும் பயனடைதல்

(ii) 14 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளையும் பள்ளியில் தக்க வைத்தல் மற்றும்

(iii) அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வி வழங்குவதில் முன்னேற்றம் காண்பது மிகவும் முக்கியத்துவம் ஆகும். குழந்தைகள் தரமான கல்வியை பெற்று கற்றல் நிலைகளில் முன்னேற்றம் காண வேண்டும்.

## கலைத்திட்ட வடிவமைப்பு 2005ல் தொடக்கப்பள்ளி ஆசிரியருக்கு இருக்க வேண்டியவிழிப்புணர்வு சார்ந்த வினாக்கள்

(i) பள்ளி என்ன சாதனை படைக்க/ எந்த காரணத்திற்காக கல்வி வழங்குகிறது.

(ii) சாதனை நிலையை அடைய எந்த மாதிரி கற்றல் அனுபவங்கள் வழங்கப்படுகிறது.

(iii) கற்றல் அனுபவங்கள் எவ்வாறு அர்த்தமுள்ள/ பயனுள்ள வகையில் பயன்படுத்தப்படுகிறது.

(iv) கற்றல் அனுபவங்கள் எவ்வாறு செயல்திறமை வாய்ந்ததாக பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த முடியும்



குறிப்புகள்

தொடக்கக் கல்வி ஆசிரியராகிய உங்களுக்கு கிடைக்கக்கூடிய/ பயன் படுத்தப்படக்கூடியவை கீழே விளக்கப்பட்டுள்ளது




## 8.3.2 ஆசிரியர் பணிமுன் பயிற்சி

- அங்கீகாரம் பெறாத நிறுவனங்களைத் தவிர மற்ற அனைத்து வகை நிறுவனங்களிலும், மாநில அரசுத் துறைகளிலும் தேர்வு துறையும் வடிவமைத்துள்ள திறமை வாய்ந்த தகுதியான ஆசிரியர்களே நியமிக்கப்படுவர். போதுமான கல்வித்தகுதியும் போதுமான வேலைவாய்ப்புத் தகுதியும் உள்ளவர்களை நியமனம் செய்தால்தான் அங்கீகாரமும், நிதியுதவியும் கிடைக்கும். ஆகையால் அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மாநில அரசு வகுத்துள்ள விதிமுறைகளைச் சரியாக பின்பற்றுதல் வேண்டும்.
- ஆசிரியர்களுக்கு ஆரம்பக்கட்ட பயிற்சி (பணிமுன் பயிற்சி) மூன்று நிலைகளில் வழங்கப்படுதல் வேண்டும். அதாவது, பணிமுன் பயிற்சி, தொடக்கக்கல்வி ஆசிரியர் பயிற்சி மற்றும் இடைநிலைக் கல்வி ஆசிரியர் பயிற்சி
- தொடக்கப்பள்ளி ஆசிரியர் கல்வி, ஆசிரியர்கள் முக்கியமாக ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை கற்பித்தல் செய்திடல் வேண்டும்.

  தொடக்கப்பள்ளி ஆசிரியர் கல்வி சேர்க்கைக்கு பள்ளியில் 10 அல்லது 12 வருடங்கள் கல்வி பயின்றிருக்க வேண்டும். நவீன



குறிப்புகள்

காலத்தில் (தற்காலத்தில்) பெரும்பாலான மாநிலங்கள் தொடக்கப்பள்ளி ஆசிரியர் கல்வி சேர்க்கைக்கு குறைந்த பட்ச தேவையாக பள்ளியில் 12 ஆண்டுகள் கல்வி பயின்றிருக்க வேண்டும் என்று வரையறுத்துள்ளன. ஆனால் இன்னும் சில மாநிலங்கள் தொடக்கக்கல்வி ஆசிரியர் கல்வி சேர்க்கைக்கு குறைந்த பட்ச தேவையாக இடைநிலைக்கல்வியே போதும் என்ற நிலையில் சேர்க்கை நடைபெறுகின்றது. பெரும்பாலான மாநிலங்களில் தொடக்கக்கல்வி ஆசிரியர் பயிற்சி காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும். இருந்த போதிலும் சில மாநிலங்களில் இதன் கால அளவு ஓராண்டு மட்டுமே ஆகும். தொடக்கப்பள்ளி ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் மூன்று வகைப்படும். அரசு நிறுவனங்கள், அரசு நிதியுதவி பெறும் தனியார் நிறுவனங்கள், அரசு நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி நிறுவனங்கள் தற்காலத்தில், அனைத்து மாநிலங்களிலும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (DIETs) தொடங்கப் பட்டுள்ளன. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மிக முக்கியமான பணி, பணிமுன் பயிற்சி வழங்குவது ஆகும். இதனோடு ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சிகளையும் சிறப்பாக வழங்கி வருகின்றது.

### 8.3.3 ஆசிரியர் பணியிடைப்பயிற்சி

இந்திய அரசின் புதிய தேசியக் கல்விக் கொள்கை (முிறிணி 1986)ல் தேசிய அளவில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி வழங்கும் திட்டம் பற்றி கூறியுள்ளது.

நடத்தப்பட்ட சில திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### • அனைத்து ஆசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி (PMOST)

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள், வளரும் நவீன கல்வியை புகுத்துதல், அனைவருக்குமான தொடக்கக் கல்வியை வழங்குதல், கற்பவர் மைய கற்றல் அணுகுமுறை, செயலாய்வு மேற்கொள்ளுதல், ஆசிரியர்களுக்கு வேண்டிய கடமையுணர்வு (பொறுப்புணர்வு) கலைத்திட்டத்தில் ஆசிரியர்களுக்கு அறிவு நிலையை மேம்படுத்திக் கொள்ளுதல் மற்றும் புதிய தேசிய கல்விக் கொள்கை பட்டியலில் குறிப்பிட்டுள்ள அனைத்தும் ஆகும்.

இது ஒரு பத்து நாட்கள் திட்டம் ஆகும். 1986-1990 வரை பணியில் சேர்ந்த 1.8 மில்லியன் ஆசிரியர்களுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT), வெவ்வேறு மாநிலங்களின் மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனங்களுடன் (SCERTs) இணைந்து இத்திட்டத்தினை சிறப்பாக நிறைவேற்றியது. படக்காட்சிகள், பயிற்சி கட்டகங்கள், அச்சிடப்பட்ட பயிற்சித்தாள்கள் தேசிய அளவில் தயாரிக்கப்பட்டு நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டது. படக்காட்சிகள் பார்க்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு பாடவேளையிலும் கலந்துரையாடல் நடைபெறும். பங்கேற்றல், இடைவினை புரிதல் முறையில் இப்பயிற்சி சிறப்பாக இருந்தது.

- **தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான சிறப்பு புத்தாக்கப்பயிற்சி (SOPT)யானது 199394ல் தொடக்கக்கல்வி/ உயர் தொடக்கக் கல்வியின் தரத்தினை உயர்த்தி அனைவருக்கும் தொடக்கக்கல்வி வழங்குவதற்காக உருவாக்கப்பட்டது.**

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், தொடக்க நிலையில் குறைந்தபட்ச கற்றல் இலக்குகள் (MLL) நடைமுறைப்படுத்துவது, தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு கரும்பலகைத் திட்டத்தின் மூலம் தேவையான கற்றல் கற்பித்தல் பொருட்களை வழங்குதல், ஊடகங்களின் உதவியை நாடுதல், கற்பவர் மைய கற்றலுக்கு ஆசிரியர்களை ஊக்கப்படுத்துவது. இத்திட்டம் ஒவ்வொரு ஆண்டும் 0.45 மில்லியன் ஆசிரியர்களுக்க நடைமுறைப் படுத்தப்பட்டது.

## 8.3.4 ஆசிரியர் பயிற்சிக்கான சிறப்புத்தேவைகள்

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT), மாற்றுத்திறன் மாணவர்களை வகுப்பிலுள்ள மற்ற மாணவர்களுடன் இணைத்து கற்பித்தல். கற்றல் செயல் மேற்கொள்ள ஆசிரியர்களுக்கும், கல்வி அதிகாரிகளுக்கும் சிறப்பு பணியிடைப்பயிற்சி திட்டங்களை அளித்துள்ளது. இத்திட்டமானது, பொதுவான ஆசிரியருக்கு சிறப்பு பணியிடைப் பயிற்சி அளித்து ஒவ்வொரு தனிப்பட்ட மாணவனின் தேவைகளை கண்டறிந்து தொடக்கப்பள்ளிகள் உள்ளடங்கிய பள்ளிகளாக (inclusive schools) மாற்றி, வகுப்பறையில் பொதுவான மாணவரோடு மாற்றுத்திறன் பெற்ற மாணவர்களும் கல்வி கற்க வாய்ப்புகள் ஏற்படுத்துதல் வேண்டும். தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் நான்கு மண்டல கல்வி நிறுவனங்கள் (4RIEs) வழியாக ஆசிரியர்களுக்கு பல்வகை பயிற்சிகள் வழங்கப்பட்டது. சிறப்புப்பள்ளிகளுக்கு தனியாக ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டனர். பெரும்பாலும் ஒரு குறைபாடு உடைய மாணவர்களுக்கான பள்ளிகள் அல்லது பல குறைபாடு உடைய மாணவர்கள் உதாரணமாக வாய் பேசமுடியாமை, காது கேளாமை,

குறிப்புகள்

etc… போன்ற பள்ளி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தேசிய உடல் ஊனமுற்றோர் நல நிறுவனம், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் இந்திய மறுசீரமைப்பு கழக அனுமதியோடு பயிற்சிகளை அளித்து வருகின்றன. பல்வேறு பல்கலைக்கழகங்கள் சிறப்புக் கல்விக்கான இளங்கலை கல்வியின் பட்டம் (B.Ed), முதுகலைப்பட்ட (M.Ed) வகுப்புகளை நடத்துகின்றன.

## 8.3.5 தொடக்க மற்றும் உயர் தொடக்க நிலை வரையிலான ஆசிரியர் கல்விக்கான

## கலைத்திட்டம்

- தொடக்கப்பள்ளிகளில் தொடக்கப்பள்ளி ஆசிரியர் குறிப்பாக முதல் மூன்று வகுப்புகளுக்கு இலக்கணம், எண்கள் (கணிதம்) மற்றும் வாழ்வியல் திறன்களை கற்றுத்தர எதிர்பார்க்கப் படுகின்றார். இருந்தபோதிலும் குழந்தைகளின் வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் கற்றல் போன்றவற்றினை மேம்படுத்துவதற்கு தேவையான அறிவும் அணுகுமுறைகளும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு மிகவும் தேவையானது ஆகும்.
- தொடக்கக்கல்வி ஆசிரியர்களுக்கான கலைத்திட்டம் மாநில அரசுகள்/ மாநில ஆசிரியர் கல்வி அமைப்புகள் மூலம் உருவாக்கப் படுகின்றது. இக்கலைத்திட்டம் காலத்திற்கேற்ப ஆய்வுக்குட்பட்டு மறுசீரமைக்கப்பட வேண்டும்.
- தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT) தொடக்கக்கல்விக்கென மாதிரி கலைத்திட்டத்தை உருவாக்கி யுள்ளது. மாநில அரசுகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் இந்த மாதிரி கலைத்திட்டத்தினை தங்கள் ஆசிரியர் கல்வி படிப்புகளுக்கு பயன்படுத்திக்கொள்ளலாம். தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் இந்த கலைத்திட்டத்தினை காலத்திற்கேற்ப மறுசீரமைப்பு செய்யும். தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தற்போது புதிதாக வெளியிட்டுள்ள கலைத்திட்ட வடிவமைப்பினை அடுத்த துணை அலகில் நாம் கற்கலாம்

## 8.3.6 ஆசிரியர் பயிற்சிக்கான நிறுவன உள்கட்டமைப்பு

ஆசிரியர்களுக்கான பணியிடைப்பயிற்சிகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் தேசிய அளவில், மாநில அளவில், மண்டல

குறிப்புகள்

அளவில், மாவட்ட அளவில் மற்றும் துணை மாவட்ட அளவில் சிறப்பாக ஏற்பாடு செய்திடல் வேண்டும். அலகு 4ல் இது பற்றிய கருத்துகளை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

தேசிய அளவில் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT), தேசிய கல்வியியல் நிர்வாகம் மற்றும் திட்டமிடுதல் பல்கலைக்கழகம் (NUEPA), ஆங்கிலம் மற்றும் அந்நிய மொழிகளுக்கான மைய நிறுவனம் (CIEFL), ஹைதராபாத் மற்றும் இந்திய மொழிகளுக்கான மைய நிறுவனம் (CIIL) மைசூரு. மண்டல அளவில், மண்டல கல்வி நிறுவனங்கள் நாட்டின் நான்கு மண்டலங்களில் வடக்கு மண்டலம், மேற்கு மண்டலம், கிழக்கு மண்டலம் மற்றும் தெற்கு மண்டலம் ஆகிய இடங்களில் உள்ளது. தற்பொழுது இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களுக்காக "சில்லாங்" என்ற இடத்தில் மண்டல கல்வி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாநில அளவில், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (SCERTs), மாநிலக் கல்வி நிறுவனம் (SIE), மாநில அறிவியல் கல்வி நிறுவனம், முன்னேற்றக் கல்வி பயிலும் நிறுவனம் (IASE), மைய தொழில் கல்வி நிறுவனங்கள் மற்றும் மாநில தொழிற்கல்வி நிறுவனங்கள் (SIETs). மாவட்ட அளவில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பணியிடைப் பயிற்சி நிறுவனங்கள். மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், தொடக்கப்பள்ளி மற்றும் உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பணியிடைப்பயிற்சிகளை வழங்கி வருகின்றது. தற்காலத்தில் பணியிடைப்பயிற்சி மையங்கள் துணை மாவட்ட அளவிலும் (கல்வி மாவட்ட அளவில்) ஒன்றிய அளவில் மற்றும் குறுவள மைய அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மையங்கள் மாவட்ட தொடக்கக்கல்வித் திட்டம் (DPEP) அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

## 8.3.7 ஆசிரியர்கள் தேர்வு முறை

ஒவ்வொரு மாநில அரசும், ஆசிரியர்களை தேர்வு செய்வதற்கு வெவ்வேறு தேர்வு முறைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றன. சில மாநிலங்கள் போட்டித் தேர்வுகள் நடத்தி விண்ணப்பதாரர் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் சில மாநிலங்கள் விண்ணப்பதாரரின் கல்வி சான்றிதழ்கள், பணி அனுபவம் அடிப்படையில் தேர்வு செய்கின்றன. ஒவ்வொரு விண்ணப்பதாரரின் தேர்வும் அவர்களின் போட்டித் தேர்வில் பெற்ற மதிப்பெண் மற்றும் முந்தைய பணி அனுபவங்கள் அடிப்படையில் நடைபெறும். சில மாநிலங்கள் ஆசிரியர்களை தேர்வு செய்வதற்கு இரண்டு விதமான செயல்பாடுகளை மேற்கொள்கின்றனர். அதாவது விண்ணப்பதாரர் போட்டித் தேர்வில் பெற்ற மதிப்பெண், அவர்களின் கல்வி பயின்ற போது

குறிப்புகள்

பெற்ற மதிப்பெண் தர நிலையுடன் கூட்டி மொத்தத்திற்கு மதிப்பெண் அளித்து தேர்வு செய்யும் முறை. விண்ணப்பதாரர்களை நேர்காணலுக்கு அழைத்து அங்கு அவர் நேர்காணலில் வினாக்களுக்கு விடையளிக்கும் வாய்மொழித் தேர்விற்கு சில மதிப்பெண்கள் விண்ணப்பதாரருக்கு வழங்கப் படுகிறது.

## 8.4 உயர் தொடக்கக் கல்வி ஆசிரியர் கல்விக்கான தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு (2009-2010)ன் முக்கிய சாரம்சங்கள்

ஆசிரியர் கல்விக்கும் பள்ளிக் கல்விக்கும் இடையே பரஸ்பர தொடர்பு உள்ளது. இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தே இருக்கும். முறையான ஆசிரியர் கல்வியின் மூலமாகவே ஒரு சிறந்த ஆசிரியரை உருவாக்க முடியும். இன்றைய மற்றும் நாளைய எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகைகளில் ஆசிரியர் கல்வியை சீரமைத்தல் அவசியம்.




### நிலை I

தொடக்க நிலைப் பள்ளிக்கான ஆசிரியர் கல்வி (வகுப்பு I முதல் V)

### 8.4.1 அடிப்படை காரணங்கள்

ஆசிரியர் இன்றைய சூழலுக்கு தகுந்தவாறு தன்னை தயார்படுத்திக் கொள்ள மேலும் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர போதிய பயிற்சிகள் அவசியம். அனைவரும் அறிந்த ஒன்றைஆசிரியரில் இருந்து ஏதுவாளராக ஆசிரியர்கள் அழைக்கப்படுகின்றனர். எனவே ஆசிரியர் கல்விக்கான கலைத்திட்ட கட்டமைப்பு இன்றைய சூழலுக்கு ஏற்றவாறு நெகிழ்வுத்தன்மையுடன் செயல்படுத்தப்பட வேண்டுமென்று தேசிய ஆசிரியர் கல்விக்கான கலைத்திட்ட கட்டமைப்பு வலியுறுத்துகிறது. (National Curriculam Framework for Teacher Education(NCFTE), 2009-2010 for Elementary Teachers)

## 8.4.2 பாடத்திட்டம்

குறிப்புகள்

வளர்ந்து வரும் இந்திய சமூக (The Emerging Indian Society) பாடத்திட்டத்தில் (NCFTE) தேசிய கலைத்திட்டம் *2005* (NCF 2005) வலியுறுத்திய குழந்தைகளுக்கான உரிமை, மனித உரிமைக்கல்வி, மதிப்புகள் மற்றும் அதன் அம்சங்கள், கல்வியின் முன்னோக்கம், சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியல் சார்ந்த நாட்டின் வளர்ச்சி மேலும் குறிப்பிடத்தக்க பல துறைகளில் உள்ள மாற்றங்கள் குறிப்பாக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி இன்னும் பல. ஆசிரியர்கள் தகுந்த சூழ்நிலைக்கேற்றவாறு தங்களை தயார்படுத்திக்கொள்வது அவசியம்.

- உளவியல் பாடத்திட்டத்தில் கற்றல், கற்பித்தல், உடல்நலம் மற்றும் விளையாட்டுத்துறை சார்ந்த கல்வி, சிறப்பு குழந்தைகளுக்கான கல்வி இவை அனைத்தும் மாணவர்களுக்கு பாடப்பகுதிகளாக அளிப்பதன் மூலம் கற்போருக்கு சமூகம் மற்றும் அதை சார்ந்த சமுதாயத்தைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது.
- பள்ளிக்கட்டமைப்பு மற்றும் கற்பித்தல் முறைகளை ஆசிரியர்கள் நன்கு அறிந்திருத்தல் அவசியம்.

## 8.4.3 பயிற்சிகள்

- ஒருங்கிணைந்த தத்துவம் மற்றும் அதன் வழிமுறைகளை இணைத்து கற்பித்தல் செயல்பாடுகளை உருவாக்குதல் வேண்டும்.
- கற்பித்தல்கள், கற்கும் பாடப்பொருள் மற்றும் அது தொடர்புடைய சமூகத்தையும் ஒருங்கிணைத்தல் அவசியம்.
- ஆசிரியர்கள் பல பிரச்சினைகளை கையாள உள்ளதால் அவர்களின் திறனை மேம்படுத்திட செயல் ஆராய்ச்சியை பயிற்சியுடன் வழங்குவதன் மூலமாக ஆசிரியர்கள்பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதன் தீர்வுகளை செயல்படுத்திட ஏதுவாக அமைய வாய்ப்பளிக்கப்படுகிறது.

## 8.4.4 கலைத்திட்ட பரிமாற்றம்

கலைத்திட்டம் மூன்று அலகுகளின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. அனைத்து பயிற்சி ஆசிரியர்களும் பயிற்சி இறுதியில் முழு அர்ப்பணிப்புடனும், ஆழ்ந்த சிந்தனை மற்றும் சிறந்த செயலூக்கமுடைய ஆசிரியராக திகழ வேண்டும் என்பதே முக்கிய குறிக்கோள்களாகும்.

குறிப்புகள்

## • கோட்பாடு

இம்முறையில் அனைவரும் செயல்பாடுகளிலும் பங்குபெறுதல், செயல்சார்ந்த அணுகுமுறையில் பயன்படுத்தி கலந்துரையாடல், கருத்தரங்குகள், தொழில்நுட்பம் சார்ந்த கற்பித்தல், சுய ஆய்வு மற்றும் செய்முறை பயிற்சிகள்.

## • கற்பிக்கும் முறை

பாடப்பொருள் மற்றும் கற்பிக்கும் முறையுடன் ஒருங்கிணைப்பதே கற்பித்தல் முறையாகும். பள்ளி சார்ந்த பாடங்களை அதற்கு தகுந்தார்போல் முறையான கற்பித்தல் வழிகளை ஆராய்ந்து செயல்படுத்துதல் அவசியம்.

## • செய்முறை பயிற்சி

உள்ளார்ந்த கற்றல் கோட்பாடுகளை வெளிக்கொணர்வதற்கு செய்முறை பயிற்சி முக்கிய பங்காற்றுகிறது. மேலும் செய்முறை பயிற்சியில் பலதரப்பட்ட பள்ளி அனுபவங்கள், பள்ளி மற்றும் சமூக தொடர்பு, செயல் ஆராய்ச்சி, ஆராய்ச்சி மற்றும் கல்வி தொடர்புடைய செயல்பாடுகளின் மூலம்மாணவர்களின் ஆளுமையை மேம்படுத்த எதிர்கால ஆசிரியர்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

### செயல்பாடு 2

கீழ்காணும் தலைப்புகளுக்கு தங்களின் புதிய கருத்துகள் பதிவுசெய்க.

**கோட்பாடு** ..............................................................................................

..............................................................................................

..............................................................................................

**கற்பிக்கும் முறை** ..............................................................................................

..............................................................................................

..............................................................................................

**செய்முறை பயிற்சி** ..............................................................................................

..............................................................................................

..............................................................................................

## 8.4.5 ஆசிரிய பயிற்றுநர்களின் பங்கு

ஆசிரிய மாணவர்களுக்கு கலைத்திட்ட பயன்பாட்டு முறை முக்கிய சவாலான ஒன்று. எனவே, அவர்கள் அதற்கு ஏற்றார்போல் தொடர்ந்து திட்டமிடல், ஆராய்ந்து செயல்படுத்துதல் மற்றும் மதிப்பிடுதல் போன்றவைகளில் பயிற்சி முடியும்வரை தொடர்ந்து பயிற்சி அளித்தல் அவசியம்.

## 8.4.6 மதிப்பீடு

மதிப்பிடுதல் ஒரு பயிற்சியின் குறிக்கோள்களை முழுமையாக அடைய வழிவகை செய்யும். இப்பயிற்சியின் நோக்கம், கற்பித்தல் செயல்பாடுகள் மற்றும் செய்முறை செயல்பாடுகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு முழு பயிற்சியையும் மதிப்பீடு செய்தல் அவசியம். தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டை கையாளுவதே சிறந்ததாகும்.

## 8.4.7 மதிப்பீட்டுக் கருவிகள்

மதிப்பீட்டு நோக்கங்களை குறித்தே தேர்வு செய்யப்பட்ட மதிப்பீட்டுக் கருவி செயல்படுத்தப்படுகிறது.

- உடனடி வகுப்பறை சோதனை எழுத்துத் தேர்வு (Paper pencil Test)
- வாய்மொழி தேர்வு (Oral Test)
- செயல்திறன்

மதிப்பீட்டு முறை, உள் மற்றும் வெளி மதிப்பீட்டு முறை அல்லது இரண்டும் சேர்ந்து மதிப்பெண்களுக்கு பதில் தர புள்ளிகளில் வழங்கப் படுகிறது. இதனால் கற்போரிடையே ஆக்கப்படிநிலையை நோக்கி சிறந்த ஆசிரியராக தகுதி பெற வாய்ப்பளிக்கப்படுகிறது. மேலும், கற்போரிடையே நிலவும் மன அழுத்தத்தை குறைத்து சிறந்த கற்றல் சூழ்நிலையை உருவாக்குகிறது.

### செயல்பாடு 3

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து பாடப்பகுதிகளையும் படித்த பின் மூன்று கேள்விகளை உருவாக்கவும், அக்கேள்விகள், ஏன்,எதற்கு மற்றும் எப்படி என்ற வினா வடிவில் உருவாக்கவும்

குறிப்புகள்

என்ன ? 1. ..........................................................................................

2. ..........................................................................................

3. ..........................................................................................

ஏன் ? 1. ..........................................................................................

2. ..........................................................................................

3. ..........................................................................................

எப்படி ? 1. ..........................................................................................

2. ..........................................................................................

3. ..........................................................................................

## நிலை II

## தொடக்கக் கல்விக்கான ஆசிரியர் கல்வி (வகுப்பு I முதல் VIII)

### 8.4.8 அடிப்படைக் காரணங்கள்

கட்டயாக் கல்வி உரிமைச்சட்டத்தில் 14வயது நிரம்பிய அனைவரும் கட்டாயம் கல்வி பயின்றிருத்தல் அவசியம் என்று சட்டம் இயற்றப் பட்டுள்ளது.

### 8.4.9 பாடத்திட்டம்

- வளர்ந்து வரும் இந்திய சமூக பாடத்தின் மூலம் வருங்கால சமூகத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் எதிர்கால ஆசிரியர்களால் திட்டமிட்டு செயல்படுத்த ஏதுவான வகையில் நடுநிலைக் கல்வியில் தற்போது இந்தியாவில் உள்ள நிலை பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கள் தெளிவாக எடுத்துரைக்கப் பட்டுள்ளது.
- உளவியல் கற்றல் கற்பித்தல் பாடம் மூலமாக மாணவர்களுக்கு ஏற்றார்போல் கற்பித்தல் யுக்திகளை கையாளும் முறையை அறிந்து கொள்ள ஏதுவான வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- சுகாதார மற்றும் உடற்கல்வி பாடத்தின் மூலம் மாணவர்களுக்கு தேவையான உடற்பயிற்சியை கண்டறிந்து செயல்படுத்திடும் வகையில் சிறப்பான கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

- ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் பாடத்தின் மூலமாக மாணவர்களிடையே ஏற்படம் பிரச்சனைகளை கண்டறிந்து எதிர்கொள்ளும் முறையை பயன்படுத்தி தீர்வு காணும் வகையில் அமைந்துள்ளது.

## 8.4.10 பயிற்சிகள்

வருங்கால ஆசிரியர்களை சிறந்த முறையில் உருவாக்கிட முன் வழிகாட்டுதல் மற்றும் பின் வழிகாட்டுதலைக் கற்பித்தல் மூலமாக பயிற்சி அளிக்கப்படுகிறது.

- செயல் ஆராய்ச்சியை மேற்கொண்டு பிரச்சினைக்கு தீர்வு காணுதல்.
- கற்பித்தல் முறையில் உள்ள சிக்கல்களை ஆராய்ந்து அதற்கான தீர்வை கண்டறிந்து அனைத்து நடுநிலைப் பாடங்களுக்கும் கற்பித்தல் முறையை கையாளுதல்.
- பள்ளியில் பயிற்சி பெறுவதன் மூலமாக பலதரப்பட்ட அனுபவங் களைப் பெற்று உள்ளார்ந்த கல்வியின் மதிப்பு மற்றும் வேலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்படுத்தும் வகையில் கட்டகம் அமைந்துள்ளது.
- பள்ளி சூழ்நிலை, மாணவர், ஆசிரியர் ஒற்றுமையை மட்டும் மேம்படுத்துவதாக இருத்தல் கூடாது. மாணவர்களின் நவீன கால கற்றலுக்கு ஏற்ப கற்பித்தல் முறையை தேர்ந்தெடுக்க ஏதுவான சூழ்நிலையை அமைத்திடல் வேண்டும். மேலும் மாணவர்களின் ஆளுமைத்திறனை மேம்படுத்த திட்டமிடுதல் மற்றும் செயல் படுத்தும் திறனை வளர்த்துக் கொள்ளும் தளமாக பள்ளி அமைய வேண்டும்.

## 8.4.11 கலைத்திட்ட பரிமாற்றம்

### • கோட்பாடு

விரிவான விவாதங்கள், குழு கற்றல், செய்முறைப்பயிற்சி மற்றும் விளக்கவுரை, தானே கற்றல், செயல்திட்டம் போன்ற வழிமுறைகளில் கற்றல் நடைபெறுகிறது. ஆசிரியர்கள் பாடத்திற்கு தகுந்தார்போல் பல கற்றல் முறைகளை ஒன்றிணைத்து கற்பித்தலைச் செயல்படுத்த வேண்டும். மாணவர்களின் வளர்ச்சியில் தனி அக்கறையுடன் கலைப்பயணம் மற்றும்துணைக்கட்டகங்களை தயாரித்து மாணவர்களுக்கு பாடங்களை கற்பிக்க வேண்டும்.

குறிப்புகள்

## • கற்பித்தல் முறை

கற்றல்,கற்பித்தல் செயல்பாடுகள் மூலம் மாணவர்களிடம் தானே கற்றல், குழு கற்றல் மற்றும் சுயமாக கண்டறியும் திறனை மேம்படுத்துதல் அவசியம்

- குழு கற்றல்களின் மூலமாக விரிவான விளக்கம் அளிக்கப்படுகிறது. கற்பித்தல் பயிற்சியின் மூலம் ஒரு சிறந்த ஆசிரியரை உருவாக்க முடியும். ஆசிரியர் பயிற்சியில் போதிய கற்றல் அனுபவத்தைப் பெற்று திறனை மேம்படுத்திக் கொள்ளுதல் அவசியம்.கலைத்திட்ட பரிமாற்றத்தின் மூலம் கற்றல் கற்பித்தலில் முன்னேற்றம் மற்றும் செறிவூட்டுதல் அவசியம். கற்பித்தல் முறையை ஆராய்தல் மூலம் ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் திறனை மேம்படுத்திக்கொள்ள அடித்தளமாக அமைகிறது.

## • செய்முறை

தொழிற்கல்வியின் முக்கியத்துவத்தையும் அக்கல்வியில் அவர்களின் திறன்களை மேம்படுத்திக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. பள்ளி மற்றும் சமூகம் இணைந்த சூழல் ஆசிரியர்களுக்கு ஒரு சிறந்த கற்றல் யுக்தியை கையாள ஏதுவாக அமைகிறது.

ஆசிரியர்கள் பள்ளியில் கற்றல் செயல்பாடுகளை முறையாக ஒருங்கிணைத்தல் அவசியம். அவர்கள் கற்றலுக்கு ஏற்றவாறு செயல்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டும். பாடத்திற்கு ஏற்ப கற்றல் செயல்பாட்டு வகைகளை கண்டறிதல் மூலம் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்புகள் மூலம் மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர ஏதுவாக சூழலை உருவாக்கிட வேண்டும்.

## 8.4.12 ஆசிரிய பயிற்றுநர்களின் பங்கு

ஆசிரிய பயிற்சியாளர், ஆசிரியர்களின் உடல், சமூகம், உணர்வு மற்றும் கலை உணர்வை மேம்படுத்தும் வகையில் உறுதுணையாய் செயல்பட வேண்டும். அவர்களின் படைப்பாற்றல் மற்றும் கட்டமைப்பு திறனை மெருகூட்டுதல் அவசியம். செய்முறை பயிற்சிகள் மூலம் இவை அனைத்தும் சாத்தியம். அதனால் கற்றல் செயல்பாடுகளை முறையாக மற்றும் தொடர்ந்து செயல்படுத்துதல் அவசியம். கற்பித்தல் செயல்பாடுகளை ஆசிரியர்களுக்குத் தகுந்தார் போல் செயல்படுத்துதல் அவசியம். குழு கற்றலை மையமாகக் கொண்டு கற்பித்தல் செயல்பாட்டின் மூலமாக கூட ஆசிரியர்களிடையே கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் சிறப்பாக நடைபெறும்.




## 8.4.13 மதிப்பீடு

மதிப்பிடுதல் தொடர், வளரரி மதிப்பிடுதல் மற்றும் ஒருங்கிணைத்து மதிப்பிடுதல் மூலமாக கற்றல் கற்பித்தல் முறைகளைச் செம்மையாக செயல்படுத்திட முடியும். முறையான மதிப்பிடுதல் மூலமாக ஆசிரியர்களால் மாணவர்களுக்கு ஏற்ற கற்பித்தல் முறையையும் மற்றும் கலைத்திட்ட பரிமாற்றத்தையும் முறையாக செயல்படுத்த ஏதுவாக அமையும்.

## 8.4.14 மதிப்பீட்டு கருவிகள்

வெற்றி, தோல்வி நிர்ணயம் செய்வது கலைத்திட்ட பரிமாற்றத்தில் மதிப்பீட்டு முறையை சார்ந்ததாகும். அம்மதிப்பீட்டு முறை தாங்கள் அனைவரும் நன்கு அறிந்தவையே.

### செயல்பாடு 4

நடுநிலைப்பள்ளிகளுக்கான ஆசிரியர் பயிற்சியில் உள்ள இரு நிலைகளின் வேறுபாடுகளை ஒப்பிட்டு கூறுக (5 வரிகளில்)

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

## 8.5 தொடக்க ஆசிரியர் கல்வி மாதிரிகள் மற்றும் ஒருங்கிணைந்த மாதிரிகள்

கல்விக்குழு 1964-66ன் (The Education Commission) அறிவுரைப்படி புதிய பாடப்பிரிவுகள் மாணவர்களின் சிறப்புத் தேவைகளை பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல், வளர்ச்சிக்கும் வழிவகை செய்ய வேண்டும். பயனுள்ள ஆசிரியர் பயிற்சி திட்டமென்பது கலாச்சார புதுமைகள் மற்றும் புதிய யுக்திகளைப் பயிற்சிகளின் மூலம், தேவைகளுக்கேற்ப அளிக்க வேண்டும்.

தொடக்கக்கல்வி பட்டயப் படிப்பிற்கு தேவையான படிப்புகளை வடிவமைப்பதில் மூன்று சாத்தியக்கூறுகள் உள்ளன.

1. தொடக்கக்கல்வி வகுப்புகள் (I-V) (Primary School Stage)
2. உயர் தொடக்கக்கல்வி வகுப்புகள் (I-VIII) (Elementary School Stage)
3. உயர் தொடக்கக்கல்விக்கு மட்டும் (VI-VIII) (Exclusively for Upper Primary Stage)

குறிப்புகள்

தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் (NCTE)ன் படி தொடக்கக் கல்வி மற்றும் முன் தொடக்கக் கல்வியின் தனி படிப்புகள், இடைநிலைக்கல்வியின் தனிப்படிப்புகளோடு வேறுபட்டு இருக்க வேண்டும். இடைநிலைக் கல்வியில் 1.76 இலட்சம் மாணவர்களும், முன் தொடக்கக் கல்வியில் 5.95 இலட்சம் மாணவர்களும் பயில்கின்றனர். (ஆதாரம்: தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வி புள்ளி விபரம், 199697, இருந்து பெறப்பட்டது.

## 8.5.1 தொடக்க ஆசிரியர் கல்வியின் இன்றைய நிலை

## தொடக்கக்கல்வி ஆசிரியர் பட்டயப் பயிற்சி (D.El.Ed)

இந்த பட்டயப் படிப்பானது பன்னிரெண்டு வருட பள்ளிப்படிப்பை முடித்தவர்களுக்கும், ஆசிரியர் பணியில் சேரும் ஆவலுள்ளவர்களுக்கும் பொருந்தும். இந்த படிப்பானது 2 வருட கால வரையறையுடன் 6 மாத கால வேலைவாய்ப்பு (Internship) பயிற்சியையும் அளிக்கிறது. இதன் பாடத்திட்டம் மூன்று கூறுகளைக் கொண்டது.

### 1. கருத்தியல் (Theory)

முதலாமாண்டில் ஒன்பது பாடங்களையும் இரண்டாமாண்டிற்கு எட்டு பாடங்களையும், செய்முறை சம்மந்தப்பட்ட பாடங்களுக்கு செய்முறை களையும் கொண்டது.

### 2. செய்முறை (Practical)

நுண்ணிலைக் கற்பித்தல், ஆசிரியர் பயிற்சி, சமூக சேவை, இசை, கலை மற்றும் விளையாட்டுக் கல்வியை இது உள்ளடக்கியது.

### 3. உள்ளிருப்புப் பயிற்சி (Internship)

இது ஆசிரியர்களின் திறன்கள் மற்றும் பயிற்சிகளை ஆறு மாத கால அளவில் அதிகரிக்க பயன்படுகிறது.

## 8.5.2 தொடக்க ஆசிரியர் கல்வியை மேம்படுத்துதல்

கல்வி என்பது ஒரு குறிப்பிட்ட அறிவை ஒழுங்குபடுத்துவது மட்டுமின்றி பல்வேறு துறை சார்ந்த அறிவை ஒழுங்குபடுத்துவதாகும்.சூழல் மற்றும் விடைகளுக்கேற்ப தொடர்ந்து உருவாக்கப்படுவதாகும். இடைநிலை ஆசிரியர் பயிற்சி பள்ளியானது பல்கலைக் கழக கல்வியை வளர்க்கவும், தொடக்கக்

குறிப்புகள்

கல்வி ஆசிரியர் பயிற்சி பள்ளி மற்றும் முன் தொடக்கக் கல்வியை புறக்கணிக்கவும் செய்கிறது.

NCF-2005ன் அறிவுரைப்படி பணிமுன் பயிற்சியானது தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு இன்றியமையாததாகிறது. இதில் பாடத்திட்டத்தை சிறப்பாக கையாள்வதற்கு உதவி புரிகிறது.

தொடக்கக் கல்வி ஆசிரியர் பட்டய பயிற்சியானது தற்போது பல்வேறு மாற்றங்களை சந்தித்து வருகிறது. இம்மாற்றங்களுக்கு பொருத்தமான முயற்சிகளை NCF 2005. RTE 2009, மனித உரிமைகள் மற்றும் குழந்தை உரிமைகள், அடிப்படை உரிமைகள், கற்றலில் பங்கேற்றல் போன்றவை முன்னெடுத்து செல்கின்றன, புதிய கருப்பொருள்களை சேர்த்துக் கொள்வதன் மூலம் நடைமுறையில் உள்ள பாடபொருள் தேவைகளில் அனைத்து பங்குதாரர்களும் திட்டமிட வாய்ப்பு அமைகிறது. திறன் கற்றல், பயிற்சி, பொருத்தமான தகவல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல், மாற்றங்கள் செய்தல், பாடப்பொருள் இவையாவும் ஆசிரியர் கல்வியின் வளர்ச்சி என்று அழைக்கப்படுகிறது.

தொடக்கக்கல்வி ஆசிரியரின் பணியானது பாடத்திட்டங்களைத் தீர்மானம் செய்வதில் இன்றியமையாததாகிறது.அவை,

- அடிப்படைப்பாடங்கள்
- பல்வேறு பாடங்களுக்கு கலைத்திட்டத்துடன் இணைந்த கற்றல் முறை
- பள்ளி அனுபவத் திட்டம்
- செய்முறைப் பயிற்சி

கல்வியானது பல்வேறு துறைகளோடு இணைவு பெற்றதாக இருக்க வேண்டும். கல்வியின் அடிப்படைக் கருத்து கல்வியோடு மட்டுமல்லாமல் அதனோடு தொடர்புடைய தத்துவம், உளவியல் மற்றும் சமூகவியல் போன்றவற்றையும் சார்ந்திருக்கும். இக்கல்வியின் தலையாய நோக்கம், வருங்கால ஆசிரியர்களின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிப்பதும், கற்றல் செயல்களில் உள்ள முறைகளை தீர்ப்பதாகும்.

இது போன்ற தற்கால முயற்சிகளைத் தொடக்க கல்வி ஆசிரியர் பட்டயப் பயிற்சி அர்த்தமுள்ள வகையில் மேற்கொண்டு வருகிறது. இது ஒரு நீண்ட கால செயல்முறையாயினும், தரமான ஆசிரியர் கல்விக்கு இது உதவி புரிகிறது.

குறிப்புகள்

## 8.5.3 புதிய கற்பித்தல் மாதிரிகளுக்கானதேவை

தொடக்க கல்வியானது மனிதனின் அடிப்படை தேவையாகவும், அதில் முன் தொடக்கக் கல்வியானது முக்கியத்துவம் பெறுகிறது. பல்வேறு மாணவர்கள் பள்ளியில் பல்வேறு காரணங்களால் இடைநிற்றல் அடைகிறார்கள். மாணவர்கள் நாட்டுப்பற்று உணர்வோடு நம் தேசத்திற்குத் தேவையான வளர்ச்சியை அர்ப்பணிப்பு செய்யும்போது தனி மனித மற்றும் தேசம் வளர்ச்சி அடைகிறது.

பன்னிரெண்டு வருட பள்ளிப்படிப்பில் ஆசிரியர்கள் மாணவர்களை முழுவதுமாக புரிந்து கொள்வதில்லை. குறிப்பாக 3வது முதல் 8ஆம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவர்களை புரிந்து கொள்வதில்லை. குறைந்த கால அளவினால் ஆசிரியர் சார்ந்த அறிவு, மாணவர்களின் வளர்ச்சி, மாணவர்களின் மனநிலை மற்றும் கற்றல் தேவைகளை நாம் அறிந்து கொள்வதில்லை.

முந்தைய பாடத்திட்ட கட்டமைப்பானது பொதுவான வழிமுறைகளை மட்டுமே வலியுறுத்தியது. மாறாக தொடக்க ஆசிரியர்களின் பயிற்சி தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. ஆனால் 1998ஆம் ஆண்டு பாடத்திட்ட கட்டமைப்பு இதிலிருந்து மாறுபட்டுள்ளது. இது பொதுவான வழிமுறைகளை முதலில் வழங்கினாலும், மாவட்ட ஆசிரியர் கல்விக்கான முக்கியத்துவத்தை அளிக்கிறது.

இவையாவும் ஏற்கனவே தரமான ஆசிரியர் கல்விக்கான பாடத்திட்ட கட்டமைப்பு, தொடக்க ஆசிரியர் கல்விக்கான பாடத்திட்ட புதுப்பித்தல் அணுகுமுறை 2003 போன்றவற்றில் தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் (NCTE) யினால் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

சிறப்பு பள்ளிகளில் தரமான தொடக்கக்கல்வி ஆசிரியர்களின் பங்கு தற்போது சிறப்பானதாக இல்லை. இந்த தேவைகள் யாவும் இளங்கலை கல்வியியல் பாடம் (B.Ed) முதுகலை கல்வியியல் பாடம் M.Ed) போன்றவற்றால் பூர்த்தி செய்யப்படுகிறது. தற்போது தொடக்கக்கல்வி ஆசிரியர்கள் யாவும் முதுகலை கல்வியியல் பாடம் பயில்வதால் தம்மை மேம்படுத்தி கொள்கின்றனர். ஆனாலும் நாட்டிலுள்ள பல்வேறு மாநிலங்களில் உள்ள முதுகலை கல்வியியல் பாடமானது தொடக்க கல்வி ஆசிரியர்களுக்கு தேவையான பயிற்சியை முறையாக அளிப்பதில்லை. அதேபோல் தொடக்கக் கல்விக்கேற்ற பயிற்சியையும் முறையாக அளிப்பதில்லை. இதுவே தற்போது ஆசிரியர்களின் தரம் மற்றும் பயிற்சிக்கு அடிப்படையானது.

## 8.5.4 புதிய அணுகுமுறைகள்

### புதுமையான பாடங்களே மாற்றங்களின் தேவை

குறிப்புகள்

நிறைய கல்வியாளர்கள் தொடக்க ஆசிரியர் கல்வியானது ஒரு இளங்கலை படிப்பிற்கு நிகரானது என்றும் ஆசிரியர்கள் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு இணையாணவர்கள் என்றும் நினைக்கிறார்கள்.

Jamia Millia Islamia புதுவகையான முதுகலை கல்வியியல் படிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.

Tiss‹ முதுகலை கல்வியியல் படிப்பிற்கான திட்டங்களை மும்பையில் தொடங்கியுள்ளது.

### • ஒரு வருட இளங்கலை கல்வியியல் படிப்பு

தொடக்க ஆசிரியர்களுக்கு இரண்டு வருட பட்டயப்படிப்பிற்கு பதிலாக, இணையாக ஒரு வருட இளங்களல கல்வியியல் படிப்பினை அளித்தல்

### இளங்கலை தொடக்கக் கல்வி

இளங்கலை தொடக்கக் கல்வியானது, பன்னிரெண்டாம் வகுப்பு முடித்தவுடன் நான்கு வருட படிப்பாக ஒருங்கிணைந்த இளங்கலை கலை அல்லது அறிவியல் மற்றும் இளங்கலை கல்வியியல் படிப்பினை வழங்குகிறது.

இது இருமொழி அல்லது இரு பாடப்பிரிவுகள் கொண்ட திட்டமாகும். இத்திட்டத்தினை 1994-95ம் ஆண்டில் டெல்லி பல்கலைக்கழகத்தால் MA CESE-யினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இது பாட அறிவு, மனித வளர்ச்சி கற்பிக்கும் கலை அறிவு மற்றும் தொடர்பு திறன் போன்றவற்றை வளர்க்க உதவுகிறது.

இளங்கலை தொடக்கக் கல்வியின் மூலம், தொடக்க கல்வியை டெல்லி பல்கலைக் கழக அளவில் கொண்டு செல்லலாம். மேலும் இதன் மூலம் பல்கலை ஆசிரியர் போன்ற பயிற்சி பெற்ற தொடக்கக் கல்வி ஆசிரியரை உருவாக்கலாம்.

தற்போது இப்படிப்பு டெல்லி பல்கலைக்கழகத்தால் 8 மகளிர் கல்லூரிகளில் நடத்தப்படுகிறது. 1998-ல் இருந்து 3000க்கும் அதிகமான மாணவர்கள் இப்படிப்பினில் பட்டம் பெற்றுள்ளனர். நிறைய மாணவர்கள் அரசு வேலைகளிலும், உயர் படிப்புகளிலும் ஆராய்ச்சிகளிலும் உள்ளனர். ஆராய்ச்சி துறைகளில் கல்வி, மொழியியல், உளவியல், மொழிகள், வரலாறு, சமூக சேவை, சமூகவியல், கணிதம் மற்றும் அரசியல் போன்றவை

குறிப்புகள்

முக்கியமானவை. இதில் நிறைய மாணவர்கள் மத்திய பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவர்களாக உள்ளனர்.

இந்த படிப்பானது, ஆசிரியர் கல்வியில் சிறப்பான அடைவை பெற தொடங்கப்பட்டதாகும். மாணவர்களுக்கு ஏற்ற சூழலும் சிறந்த பயிற்சியும் இதில் அளிக்கப்படுகிறது.

தொழில் மற்றும் அறிவு சார்ந்த இந்த பட்டப்படிப்பில் உள்ள சிறப்பம் சங்களாவன

- தொடக்க ஆசிரியர் கல்வி (வகுப்புகள் 1 முதல் 8 வரை) விசிஞ்/ ழிஞ்விசி டெல்லியிலுள்ள சர்வோதயா வித்யாலயா, கேந்திரிய விந்தியாலயா, நவோதயா வித்யாலயா மற்றும் தனியார் பள்ளிகள்
- தொடக்க ஆசிரியர் கல்வியை முன்னெடுத்து செல்லுதல்
- அரசு மற்றும் அரசுத்துறை சாராத தொடக்க ஆசிரியர் கல்வியில் கற்பித்தல் மற்றும் பயிற்சி அளித்தல்
- கல்வி மற்றும் இதர துறை சார்ந்தமுதுநிலை மற்றும் ஆராய்ச்சி படிப்பு
- தொடக்க ஆசிரியர் கல்விக்கேற்ற பயிற்சியை மாநில நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழக துறைகள் மூலம் வழங்குதல்

## இணைப்புக் கற்றல் (Bridge Course)

இத்திட்டமானது உத்திர பிரதேச அரசால், இளங்கலை கல்வியியல் படிப்பில் பட்டம் பெற்ற தகுதியான ஆசிரியர்களுக்கான பயிற்சியை 6 மாத காலம் வழங்குகிறது.

புதிய மாதிரிகளுக்கான மாறுதல் ஐந்து வருடத்திற்கு ஒரு முறை கட்டமைப்பு செய்யப்பட வேண்டும்.

இருப்பினும் தற்போது நடைமுறையில் உள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி/ தொடக்கக் கல்வி ஆசிரியர் பட்டய பயிற்சியானது, பன்னிரெண்டாம் வகுப்பு முடித்தவுடன் பயிலும் வகையில் அர்த்தமுள்ளதாக உள்ளது.

## 8.6 ஆசிரியர்ஒரு ஆழ்ந்த சிந்தனை பயிற்சியாளர்

ஒரு ஆசிரியரின் வாழ்க்கையில், அவர் எதிர்பாராத நிகழ்வுகள் பல முறை நிகழ்கின்றன. அச்சிக்கலான தருணங்களில் எல்லாம் அவர் சிறந்த பாதையினை தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால் அவர் எப்படி அவ்வாறான

முடிவை எடுக்க முடியும்? நீங்களும் இத்தகைய சிக்கலான சூழலுக்கு முடிவெடுக்கும் நிலையினை அடைந்திருக்கலாம். அப்பொழுது நீங்கள் சரியான அணுகுமுறையினை எப்படி தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள்? சற்று நேரம் யோசிக்க.

இப்பொழுது நீங்கள் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டு இருந்தீர்கள். ஆம். மாணவர்களின் தேவைகளைப் பொருத்து திறமையுடன் நிலைமையை மதிப்பீடு செய்து, சிறந்த பாதையைத் தேர்ந்தெடுக்க ஆழ்ந்த சிந்தனை இடமளிக்கின்றது. ஆழ்ந்த சிந்தனையானது நமது கற்பித்தலைத் திறனாய்வு செய்ய உதவுகிறது மற்றும் எதிர்கால நடைமுறைகளை மேம்படுத்த அந்த அறிவாற்றல் பயன்படுகிறது.

ஆசிரியர்கள் முடிவை உருவாக்குபவர்கள் என்று நம்புகின்றோம். அவர்கள் வழங்கமான நடைமுறைகளைப் பற்றி கடினமான கேள்விகளைக் கேட்கிறார்கள். அவர்களின் நம்பிக்கைகள் மற்றும் கற்றல் கற்பித்தல் பற்றிய ஊகங்கள் மீதும், சிறந்த ஆசிரியராக வருவதற்கு ஒரு உணர்வு முயற்சி செயல்முறையான ஆழ்ந்த சிந்தனையினைப் பயன்படுத்துகின்றனர்.

## 8.6.1 ஆழ்ந்த சிந்தனையின் பொருள்

பின்வரும் ஆழ்ந்த சிந்தனையின் வரையறை, நமக்கு ஆழ்ந்த சிந்தனையின் பொருளுணர பெரிதும் உதவும்.

“ஆழ்ந்த சிந்தனை என்பது தங்களின் அனுவங்களை புதிய புரிதல் மற்றம் பாராட்டுகளில் ஈடுபடுத்தி ஆராயும் தனி நபர்களின் அறிவுசார் மற்றும் செயல்திறன் நடவடிக்கைகளின் பொதுவான சொல் “ ஆகும். (பவ்டு மற்றும் வாக்கர் 1985)

## ஆழ்ந்த சிந்தனைப் பயிற்சி

- ஒருவர் கற்றுக்கொண்டவற்றை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதைக் குறிக்கின்றது.
- மாற்றங்களை உருவாக்க, சிந்தனையையும் நடைமுறையினையும் புறத்தே இணைக்கின்றது.
- ஒரு தொழில்முறை பயிற்சியினை மேம்படுத்தும் இலக்கு ஒருவரின் நடவடிக்கைகளைத் திறம்பட பகுப்பாய்வு செய்யவும், சிந்திக்கவும் ஈடுபடுத்துகிறது.

குறிப்புகள்

**ஒரு ஆழ்ந்த சிந்தனை பயிற்சியாளர் ஒருவர்**

- *எதிர்காலத்தில் ஒரே மாதிரியான சூழ்நிலை வரும்போது நடவடிக்கையின் தாக்கம் மற்றும் திட்டமிடுதலை, நடவடிக்கை களைத் திறம்பட பரிசீலனைச் செய்யும் அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்கிறார்.*
- *ஆழ்ந்த கவனமான சிந்தனையால் ஒரு குறிப்பிட்ட தொழிலை மேம்படுத்துகிறார். தமது நிலையில் ஒரு ஆசிரியர் கற்பித்தலை மேம்படுத்துவதற்கு விசாரணை அடிப்படையிலான அணுகுமுறையைப் பயன்படுத்துதல்*

## 8.6.2 ஆழ்ந்த சிந்தனைப் பற்றிய கல்வியாளர்களின் கருத்துக்கள்

*"ஆழ்ந்த சிந்தனைப் பயிற்சியில், பயிற்சியாளர்கள் தங்களின் சொந்த நடவடிக்கைகளையும் மற்றும் தங்களின் கற்பிப்பவர்களின் எதிர் வினை களையும் புரிந்து கொள்ள சுய உற்றுநோக்கல் மற்றும் சுய மதிப்பிடுதலில் முறையான தொடர் சுழற்சியில் ஈடுபடுகின்றனர்." ப்ரூக்ஃபீல்டு 1995, தியேல் 1999.* (Brookfield 1995, Thiel; 1999)

*"ஆழ்ந்த சிந்தனையின் நோக்கமானது ஒரு பயிற்சியாளரின் ஆராய்ச்சியில் ஒரு குறிப்பிட்ட பிரச்சினை அல்லது கேள்வியினை வரையறுத்து விளக்குவதாக இருக்க வேண்டியதில்லை. ஆனால் நடைமுறையில் உள்ளவற்றை உற்றுநோக்கி செம்மைப்படுத்துவது ஆகும்" கன்னிங்ஹாம் 2001* (Cunningham 2001)

*"ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபடும் தனி நபர்களுக்கு, அவரின் பயிற்சியினை குறித்த வெளிப்புற பார்வையாளரின் கருத்துக்கள் மற்றும் உணர்வுகளை முறையாக அடையாளம் காணும் மனப்பான்மையும் மற்றும் அந்த ஊகங்கள் மற்றும் உணர்வுகள் பயிற்சியினை எவ்வாறு பாதிக்கும் என்கின்ற அனுமானங்கள் பற்றிய முன்னோக்கு தன்மை தேவைப்படுகிறது," இமேல் 1992* (Imel 1992)

## 8.6.3 ஆழ்ந்த சிந்தனை பயிற்சியின் நோக்கம்

*ஆசிரியர்கள் ஆழ்ந்து சிந்திப்பதன் மூலம் தங்கள் பழக்கங்களை மேம்படுத்த முடியும் எனக் கூறுவதிலிருந்து ஜான்டூயியினை ஆழ்ந்த சிந்தனையை பரிந்துரைக்கும் முதல் கல்விக் கோட்பாளராகக் கருதலாம். டூயி (1993, பக்கம் 118) ஆழ்ந்த சிந்தனையைச் "செயல்பாட்டு நிலையிலுள்ள , நீண்ட காலம் நிலைத்திருக்கின்ற மற்றும் கவனமான பரிசீலனையுடைய ஒரு கோட்பாடு*

குறிப்புகள்

அல்லது ஆதரிக்கும் தன்மையுடைய நிலைத்த மெய்ம்மையினை ஆதரிக்கும் கூற்றுகளுக்கிடையில் அவை கூற விளையும் இறுதி முடிவுகளை எட்டுவதாகும்" என வரையறை செய்கின்றார்.

ஆழ்ந்த சிந்தனையின் ஒவ்வொரு நிகழ்விலும் ஒரு நபர், கொடுக்கப்பட்ட சூழ்நிலையுடன் தான் அடைய வேண்டிய அல்லது அதற்கு ஏதோ ஒன்று தன்னிடம் இல்லை என்ற முடிவுக்கு வருவதில் இருந்து தன்னை தானே எதிர்கொள்கிறார். இந்த செயல்முறை தன் கையில் உள்ள கருத்துக்களின் அடிப்படையில், தன்னிடம் இல்லாதவற்றை யோசிக்கும் நிலையை அடைய வைக்கின்றது.

டூயி, ஆழ்ந்த சிந்தனையினை, கற்பித்தலின் ஒரு புனிதத்தன்மையுடைய அணுகுமுறையாகவும் மற்றும் வகுப்பறையில் உள்ள பிரச்சினைகளை தீர்க்க ஆசிரியர்களுக்கான வழியாகவும் பார்த்தார். அவர் திறந்த மனப்பான்மை, பொறுப்புடைமை மற்றும் முழுமனத்தன்மை ஆகியவற்றை ஆழ்ந்த சிந்தனை செயல்முறையின் மூன்று முக்கிய கூற்றுகளாக பரிந்துரை செய்கின்றார்.

டூயினை பொறுத்த வரையில்,

- திறந்த மனப்பான்மையானது பணி முறையாகக் கற்பித்தல், தகவல்களை தேடுதல் மற்றும் புதிய கருத்துக்களை ஏற்றல் மற்றும் இணைத்தல் போன்ற ஒவ்வொரு அம்சங்களிலும் ஆசிரியரின் திறனைக் குறிக்கின்றது.
- பொறுப்புடைமையானது கற்பித்தலால் மாணவர்களிடம் என்ன விளைவினை ஏற்படுத்த முடியும் என புரிந்து கொள்வதற்கும் மற்றும் தான் கற்ற தகவல்களிலிருந்து, பாடத்தைப் பொறுத்து தன்னால் என்ன பெற முடியும் என்பதை புரிந்து கொள்வதற்கும் உட்படுத்துகின்றது.
- முழு மனத்தன்மை என்பது வேலையினைப் பற்றார்வத்துடன் அணுகுவதாகும். அறிவார்வமும், பற்றார்வமும் நல்ல கற்பித்தலுக்கு அவசியமானவையாகும். தனது வேலைக்குத் தேவையான எல்லா முயற்சிகளையும் எடுக்காவிட்டால், தான் அந்த வேலைக்கான திறமையற்றவராகவும் மேலும் அந்த வேலையின் சிறந்த முடிவை எட்ட முடியாதவராகவும் இருந்து விடுவோம். முழு மனத்தன்மை என்பது கற்பித்தலையும், மற்றும் மாணவர்களின் மீதான அதன் விளைவுகளையும் தொடர்ந்து படிப்படியாக மறுபரிசீலனைச் செய்வது தனது வாழ்க்கையின் ஒருபகுதியாக கருதும், முந்தைய இரு மனப்பான்மைகளான திறந்த மனப்பான்மையினையும், பொறுப்புடைமையினையும் குறிக்கின்றது.

குறிப்புகள்

## 8.6.4 ஆழ்ந்த சிந்தனை: உணர்வுகளுடன் கூடிய அனுவபம்.

பவுடு, கியோக் மற்றும் வாக்கர் (1985) ஆகியோர் ஆழ்ந்த சிந்தனை என்பது மக்களின் அனுபவங்களுக்குப் புத்துயிர் அளித்து, அதைப்பற்றி சிந்தித்து, தீர எண்ணிப்பார்த்து மதிப்பீடுச் செய்யும் ஒரு செயல்பாடு என விளக்குகின்றார்.

அவர்கள் சிந்திக்கும் செயல்பாட்டின் உணர்வுகளாக சேர்த்து பின்வருவனவற்றை ஆழ்ந்த சிந்தனையின் மூன்று முக்கிய அம்சங்களாக முன்னிலைப் படுத்துகின்றனர்.

- அனுபவங்களுக்கு திரும்புதல்: முக்கிய நிகழ்வுகளை நினைவுக்கூறல் அல்லது விவரித்தல்.
- உணர்வு பூர்வமாக கலந்து கொள்ளல்/ இணைதல்: பயனுள்ள உணர்வுகளை பயன்படுத்துதல் மற்றும் நீக்குதல் அல்லது செயல்பாட்டைத் தடை செய்ய முயல்கிற ஒன்றைக் கொண்டிருத்தல்
- அனுபவத்தை மதிப்பிடல்: தற்போது உள்ள அறிவு மற்றும் ஒரு கருத்தமைவு கட்டமைப்பில் இந்த புதிய அறிவை ஒருங்கிணைத்து மற்றும் ஒரு நோக்கத்தின் அடிப்படையில் அனுபவத்தை மீண்டும் பரிசோதித்தல்

## 8.6.5 ஆழ்ந்த சிந்தனையின் நவீனகருத்து

டொனால்டு ஸ்கோன் (1983) அறிமுகப்படுத்திய செயல்பாட்டின்உள்அறிவு என்பது நாம் இடர்பாடுகளைக் களையும் வழியினையும் மற்றும் பிரச்சினைகளை அணுகும் முறைகளையும் வெளிப்படுத்தக்கூடிய ஒரு வகையான அறிவாற்றலைக் குறிக்கின்றது. இந்த அறிதல் உள் செயல்பாடு ஆகும். இதனை செயல்திறன் மூலம் அறியலாம், ஆனால் வாய்மொழி வெளிப்பாடாக உருவாக்க முடியாது. இந்த மறைமுக அறிவானது ஆராய்ச்சி மற்றும் நமது ஆழ்ந்த சிந்தனை மற்றும் அனுபவங்களில் இருந்து வரையறுக்கப்படுகின்றது. இந்த தொழில்முறை அறிவானது ஒவ்வொரு ஆழ்ந்த சிந்தனை கற்பித்தல் அனுபவங்களுடன் வளர்கிறது. அது மட்டுமல்லாமல் இந்த அறிவாற்றலின் அடிப்படையில் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க ஆசிரியர்களுக்கு வழிவகை செய்கிறது. அவர் தொடர் கற்றல் செயல்முறையில் ஈடுபடுவது, வரையறுக்கப்பட்ட தொழில் பயிற்சியின் இயல்புகளில் ஒன்றாக செயல்பாட்டின் மேல் ஆழ்ந்த சிந்தனையின் செயலாற்றலைப் பரிந்துரைக்கிறார்.

குறிப்புகள்

அவர், ஆழ்சிந்தனை செயல்முறையினை செயல்பாட்டின் உள் ஆழ்சிந்தனை, செயல்பாட்டின் மேல் ஆழ்சிந்தனை மற்றும் செயல் பாட்டிற்கான ஆழ்சிந்தனை ஆகிய மூன்று முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாக வரையறுக்கிறார்.

- செயல்பாட்டின் உள் ஆழ்சிந்தனை என்பது செயல்பாடு நடைபெறும் பொழுது ஏற்படும் ஆழ் சிந்தனையினைக் குறிக்கின்றது. நாம் ஒரு செயலில் ஈடுபடும் போது என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய சிந்திக்கும் திறன் ஆகும். டொனால்டு ஸ்கோன் யை பொறுத்தவரையில் இது ஒரு முதன்மையான திறன் ஆகும். இந்த சிந்திக்கும் திறமையானது முன் பெற்ற அனுபவங்களை தற்போது உள்ள சூழ்நிலையில் பயன்படுத்தி, கற்றல் தேவைகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க ஆசிரியருக்குப் பயன்படுகிறது. இது நாம் கற்பிக்கும் பொழுது ஆழ்சிந்தனை செய்யும் திறனைக் குறிக்கின்றது.
- செயல்பாட்டின் மேல் ஆழ்சிந்தனை என்பது ஒரு செயல் நடைபெறுவதற்கு முன்பும், நடைபெற்ற பின்பும் உள்ள அனுபவங்கள் மீதான ஆழ்சிந்தனையினை உள்ளடக்கியது. தங்கள் செயல்பாட்டின் வெற்றிகள் மற்றும் தோல்விகளை பகுப்பாய்வு செய்ய இது தூண்டுகிறது.
- செயல்பாட்டிற்கான ஆழ்ந்த சிந்தனையானது எதிர்கால செயல்பாட்டின் தாக்கம் பற்றிய ஆழ்ந்த சிந்தனையிலிருந்து அறிவாற்றலைப் பெறும் பொழுது நடைபெறுகின்றது. தனது கற்பித்தலுக்கான சூழ்நிலையை தானே உருவாக்கிக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வதை குறிப்பிடுகின்றது.

## செயல்பாடு 6

நெடுவரிசை கில் ஆழ்ந்த சிந்தனையின் முக்கிய அம்சங்களும் நெடுவரிசை ஙில் அவற்றின் விளக்கம்/ உதாரணங்களும் காட்டப் பட்டுள்ளன. ஒவ்வொரு நெடுவரிசை கில் உள்ள அம்சத்தினையும், நெடுவரிசை ஙில் உள்ள விளக்கம்/ உதாரணத்துடன் ஒப்பிடுக.

| நெடுவரிசை A | நெடுவரிசை B |
|---|---|
| செயல்பாட்டின் உள் ஆழ்சிந்தனை | சிறந்த பயிற்சி மற்றும் ஆராய்ச்சியின் அடிப்படையில் பாடங்கள் வடிவமைத்தல் |
| செயல்பாட்டின் மேல் ஆழ்சிந்தனை | தேர்வின்போது மாணவர்களின் விடைத்தாட்களைப் பரிசோதித்தல் |

குறிப்புகள்

| | |
|---|---|
| செயல்பாட்டிற்கான ஆழ்சிந்தனை | கேள்விகள் மற்றும் பாடங்கற்பிக்கும் முறையினைச் சீரமைப்பதைப் பொருத்தும் புரிந்து கொள்ளலை பரிசோதித்தல். அடுத்த வகுப்பிற்கு முன்போ அல்லது எதிர்கால குறிப்புகளுக்காகவோ ஒரு பாடத்தை பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ மாற்றம் செய்தல் |
| | |

## 8.6.6 சிட்ச்னர் (Zeichner) மற்றும் லிஸ்டன் (Liston)ன்ஆழ்ந்த சிந்தனை கற்பித்தல் மாதிரி

*சிட்ச்னர் மற்றும் லிஸ்டன் (1996:6)ன் ஆழ்ந்த சிந்தனை கற்பித்தல் மாதிரியானது, ஒரு ஆசிரியர் ஆழ்ந்த சிந்தனை பயிற்சியாளர் என்பதற்கான ஐந்து முக்கிய கூறுகளை அழுத்தமாக கூறுகிறது.*

*அவையாவன*

1. *தேர்வு செய்தல், பொருத்துதல் மற்றும் வகுப்பறை பயிற்சிகளின் இரண்டக நிலையினை தீர்க்க முயற்சி செய்தல்*
2. *வினாக்கள், ஊகங்கள் மற்றும் மதிப்புகளை கற்பித்தலில் கொண்டு வரும் விழிப்புணர்வு*
3. *அவர் கற்பித்தலில் நிறுவன மற்றும் கலாச்சார சூழ்நிலைகளை பொருத்துதலில் உள்ள கவனம்*
4. *கலைத்திட்ட வளர்ச்சியில் பங்கு கொள்ளல்*
5. *அவரின் சொந்த தொழில் (கற்பித்தல்) வளர்ச்சிக்குப் பொறுப்பு ஏற்றல்.*

*சிட்ச்னர் மற்றும் லிஸ்டன் (1996), ஆழ்ந்த சிந்தனை கற்பித்தலின் மரபுகளின் முக்கிய கூறுகளைத் தெளிவாகத்தெரியும்படி கூர்ந்து ஆராய்ந்துள்ளனர். ஐந்து ஆழ்ந்த சிந்தனை பயிற்சி மரபுகள் கற்பித்தல் மற்றும் ஆசிரியர் கல்வியினை சீர்திருத்தும் முயற்சிகளை அடையாளம் காண வழிவகுக்கின்றது. அவை கல்வி, சமூக செயல்திறன், வளர்ச்சி, சமூக மறுசீரமைப்பு மற்றும் பொதுவான பாரம்பரியம். இந்த செயல்முறைகள் ஒவ்வொன்றும் பொருளடக்கத்தில் ஆசிரியர் சிந்தனையின் ஒரு சிறப்பு தனிக் கவனத்தினை (பொதுவான அணுகுமுறையை தவிர்த்து ) அடையாளம் காட்டுகின்றன என்று அவர்கள் கூறுகின்றனர்.*

குறிப்புகள்

- கல்விப்பயிற்சி சார்ந்த செயல்முறைகள் முழுப்பாடப்பொருளை பிரதிபலிப்பதோடு அதனை எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பதிலும், பாடப்பொருளை மாணவர் புரிந்து கொள்ள ஊக்குவிக்கும் வகையில் விவரித்தல் மற்றும் மொழிபெயர்ப்பு செய்தல் ஆகியவற்றிலும் கவனம் செலுத்துகின்றன.

- சமுதாய செயல்திறன் என்பது ஆசிரியரின் கற்பித்தலில் செயல் விளக்கங்கள் மற்றும் ஆழ்ந்த சிந்தனை கற்பித்தல் தரவின் அடிப்படையில் அறிவியல் ஆராய்ச்சியில் வேரூன்றிய முறைகளை பயன்படுத்துவதைக் குறிக்கின்றது.

- வளர்ச்சி செயல்திறன் என்பது மாணவர்களின் பின்னணி, ஆர்வம், சிந்தனை மற்றும் வளர்ச்சி மற்றும் கல்வி சார்ந்து மாணவர்களின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் ஆசிரியர் அணுகுமுறையின் ஆழ்ந்த சிந்தனையினை வலியுறுத்துகின்றது.

- சமூக மறுசீரமைப்பு செயல்திறன் என்பது பள்ளிகளில் நிலவும் சமூக, அரசியல் சூழ்நிலை மற்றும் சமத்துவம், நீதி மற்றும் பள்ளி மற்றும் சமூகத்தில் நிலவும் மனித கட்டுப்பாடுகள் போன்றவற்றை வகுப்பறைச் செயல்பாடுகளில் மதிப்பிடுதலில் ஆழ்ந்த சிந்தனையினை வலியுறுத்துகின்றது. கற்பித்தலில் கலாச்சார, அரசியல் மற்றும் நிறுவனம் மற்றும் மாணவர்களின் வாழ்க்கை நிலையில் ஏற்படும் தாக்கம் பற்றிய விழிப்புணர்வு ஆசிரியருக்குத் தேவை.

- பொதுவான செயல்முறை என்பது சிந்தித்தலின் தரம் மற்றும் மதிப்பில் கவனம் கொள்ளாமல் கற்பித்தலில் பொதுவான ஆழ்ந்த சிந்தனையினை விவரிக்கின்றது.

நல்ல கற்பித்தல் பாடப்பொருளைத் தெளிவாக விவரித்தல் மாணவர்களின் சிந்தித்தல் மற்றும் புரிதல், ஆய்வு அடிப்படையிலான கற்பித்தல் உத்திகள் மற்றும் கற்பித்தலின் சமூக சூழல் போன்ற பல்வேறு செயல்முறைகளின் சிறப்புக் கூறுகளின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

மேலும்,

- ஆசிரியர்களின் கற்பித்தலின் நோக்கம், மதிப்பு மற்றும் ஊகங்கள் மீது ஐயம் கொள்ளாவிடினும், கற்பித்தலுக்கு உகந்த கற்றல் சூழலை தேர்வு செய்யா விடினும், அவர்கள் நல்ல ஆழ்ந்த சிந்தனை கற்பித்தலில் ஈடுபட மாட்டார்கள்



குறிப்புகள்

- ஆழ்ந்த சிந்தனை கற்பித்தலானது முடிவுகள் , பொருள்கள் மற்றும் கற்பித்தல் சூழல்கள் பற்றிய குற்றம் காண்கிற வினாக்களுக்கு உட்படுத்துகின்றது.
- நல்ல ஆழ்ந்த கற்பித்தலுக்கு, ஆசிரியர்கள் அனைத்து மாணவர்களுக்கும் ஒரே உயர்தரக் கற்பித்தலில் ஈடுபடும் ஜனநாயக முறை தேவைப்படுகின்றது.
- இது ஜனநாயக முறையிலும் மற்றும் குற்றம் காணும் படியும் அமைய வேண்டும்.

என வலியுறுத்துகிறார்கள்.

## 8.6.7 ஆழ்ந்த சிந்தனை முறைகள்

நாம் சிக்கலான அல்லது முக்கியத்துவம் வாய்ந்தது என எண்ணுகின்ற ஒரு சம்பவம் அல்லது நிகழ்வினை பதிவு செய்ய விரும்புகிறோம். அந்த சூழ்நிலையில் நமது பங்கு, நமது செயல்பாட்டின் விளைவு மற்றும் அந்த சூழல் அல்லது நிகழ்வினை சார்ந்த ஆழ்ந்த சிந்தனை ஆகியவற்றை பதிவு செய்ய வேண்டும். அதனை பின்வரும் வழிகளில் பதிவு செய்யலாம்.

- கதை கூறல் என்பது ஒரு அனுபவம் அல்லது ஒரு சம்பவம் பற்றி முதல் மனிதர் எழுதும் கதை, இது சுய மற்றும் தொழில் வளர்ச்சிகளுக்கிடையே தொடர்பினை ஏற்படுத்துமாறு அமையும்
- ஆழ்ந்த சிந்தனை இதழ் என்பது சம்பவம் அல்லது அனுபவத்தை பல கோணங்களில் பிற அனுபவங்களோடு தொடர்புபடுத்துதல் மற்றும் அந்த சூழ்நிலையிலிருந்து கற்கும் மறு செயல்பாடு ஆகும். இதில், நாம் கற்க வேண்டியவையும் அடையாளம் காணப்பட்ட கற்றல் நோக்கங்களை அடையும் வழிமுறைகளும் பதிவு செய்யப்படுகின்றது.

### செயல்பாடு 7

"ஆழ்ந்த சிந்தனை பயிற்சியாளராக வர வேண்டுமென்றால்ஞ்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக. (15 முதல் 20 வாக்கியங்களில்)

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

குறிப்புகள்

## 8.7 சுருக்கம்

இந்த அலகில், நாம் ஆசிரியர் கல்வியின் பிரச்சினைகளையும் மற்றும் தொடக்கக் கல்விக்குரிய தொடக்க மற்றும் உயர் தொடக்க துணை நிலைகளின் சஞ்சலங்களையும் அவை பள்ளிக் கல்விக்கான தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு 2005ன் முதன் பகுதியில் தலைமையிடத்தைக் கொண்டுள்ளமையும் பற்றிக் கற்றுக்கொண்டோம். குறிப்பாக ஆசிரியர் பயிற்சியாளர்களின் பணிமுன் பயிற்சி மற்றும் பணியிடை பயிற்சிக்கிடையிலான தொடர்புகள், பயிற்சிக்கான நிறுவன உள்கட்டமைப்பு தேவைகள் மற்றும் தொடக்க நிலை கல்வியில் ஆசிரியரின் வேலைவாய்ப்புகள் பற்றியும் கற்றுக்கொண்டோம்.

ஆசிரியர் கல்விக்கான தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு (NCFTE), 2009-10, அடிப்படைக்கோட்பாடு, பாடப்பொருளடக்கம், பயிற்சி, கலைத்திட்டத்தை கையாளுதல், மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டுக் கருவிகள் போன்ற தொடக்க ஆசிரியர் கல்வியின் முக்கிய அம்சங்களில் வகுப்புகள் I முதல் V மற்றும் I முதல் VIII வரையிலான ஆசிரியர் கல்வியினைப் பொருத்து குறிப்பிடத்தக்க பகுதிகளில் கவனத்தை ஈர்த்தது.

நாம் மேலும் உயர்தரப்படுத்தப்பட்ட கற்பித்தல் மாதிரிகள் உட்பட தொடக்க நிலை ஆசிரியர் கல்வி மாதிரிகள் மற்றும் உயர்கல்வி நிலையில் புதிய முயற்சிகள் தொடங்குதல் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட மாதிரிகள் பற்றி கலந்தாலோசித்தோம். இந்த முயற்சிகள் புதுமையான கருத்துகள் மற்றும் பயிற்சிகளுக்கு ஆசிரியர்கள் உடன்படவில்லையெனில் வீணாகி விடும். இதற்கு ஆழ்ந்து சிந்திக்கும் ஆசிரியர்கள் தேவை. எனவே நாம் ஆழ்ந்த சிந்தனை பயிற்சியின் பொருள் மற்றும் தொடர் முன்னேற்றத்திற்கான ஆழ்ந்த சிந்தனை முறைகளையும் கற்றோம்.

ஆசிரியர் தகுதித்தேர்வானது (TET) தொடக்க நிலை கற்பித்தலுக்கான முன் தேவை. எனவே அதனை நடத்தும் முறையினை நாம் அறிந்திருக்க வேண்டும்.

## 8.8 அருஞ்சொற்பொருள்/ விரிவாக்கங்கள்

Praxis: கோட்பாட்டிற்கு எதிரான தொழில் திறன் போன்ற செய்முறை மற்றும் பயன்பாட்டு செயல்

குறிப்புகள்

## 8.9 பரிந்துரைக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் மேற்கோள் நூல்கள்


- Approach paper for elementary teacher education curriculum renewal (2003) NCTE. New- Delhi. India
- Boud, D.Keogh, R.Walker, D.(1985) Reflection: Turning experience into learning. London:Kogan page.
- Curriculum Framework for Quality Teacher Education (1998) NCTE,
- Dewey,J.(1993) How we Think, A restatement of the relation of reflective thinking to the educative process (Revised edn.), Boston:D.C.Health.
- Kenneth M.Zeichner and Daniel P.Liston in Reflective Teaching: an Introduction.
- Kothari, D.S (Chairman)(1966) Report of the Education Commission 1964- 66. Govt. of India, New Delhi.
- MHRD (1986) National Policy on Education 1986. Govt.of India. New Delhi
- MHRD (1992) National Policy on Education 1986: Programme of Action. Govt of India, New Delhi
- National Curriculum Framework for Teacher Education (2009) NCTE, New- Delhi, India
- Schon, DA. (1983) The reflective practioner. Temple Smith: London
- <http://indg.in/primary-education/>teacherscorner/national_curriculu-for-teacher-education.pdf retrieved on 10.08.2011
- http://www/indg.in/primaryeducation/policiesandschemes/rte_ssa_final_report.pdf retrieved on 08.08.2011 <http://www/indg.in primaryeducation/policiesandschemes rte_ssa_final_report.pdf%20retrieved%20on%2008.08.2011>
- http://www.ncte-india.org/pub/curr.htm#26 <http://www.ncte-india.org/pub/curr.htm> retrieved on 12.08.2011
- <http://www.ucdoer.ie/index.php/Defining_Reflective_Practice>
- <http://www.resources.scalingtheheights.com/Schon%20and%20Reflective%20Practice.htm>
- http://www.infed.org/biblio/b-reflect.htm


## 8.10 அலகுப் பயிற்சிகள்

*தொடக்க நிலை ஆசிரியர் என்ற முறையில் ழிசிதி 2005 மற்றும் ழிசிதிஜிணி 200910 ஆகியவற்றில் எதிர்காலத்தில் தேவைப்படும் மாற்றங்களில் உனது பங்கு என்ன? (300 வார்த்தைகளில் மட்டும் விவரி)*

குறிப்புகள்

# 9. பின்தங்கியுள்ள மாணவர்களுக்கான கல்வி

## அமைப்பு

*9.0* முன்னுரை

*9.1* கற்றல் நோக்கங்கள்

*9.2* சேர்த்தல் மற்றும் தக்கவைத்தல் தொடர்பான பிரச்சினைகள்

- *9.2.1* ஆதிதிராவிட குழந்தைகளுக்கான கல்வி
- *9.2.2* பழங்குடியின குழந்தைகளுக்கான கல்வி
- *9.2.3* சிறப்புத் தேவையுடைய குழந்தைகள் (CWSN)
- *9.2.4* தொலைதூர பகுதியில் வாழும் குழந்தைகள் கல்வி
- *9.2.5.* நகர்ப்புறங்களில் கல்வி இழந்த குழந்தைகள்
- *9.2.6* பணிபுரியும் குழந்தைக்கான கல்வி (குழந்தைத் தொழிலாளர்)
- *9.2.7* சிறுபான்மை குழந்தைகளின் கல்வி

*9.3* கல்வி ஆதரவு அமைப்பு

*9.4* ஒருங்கிணைந்த கல்வி

- *9.4.1* உலகநாடுகளின் பார்வையில்
- *9.4.2* ஒருங்கிணைந்த கல்வியின் நன்மைகள்
- *9.4.3* ஒருங்கிணைந்த கல்வியில் பள்ளி மற்றும் வகுப்பறை

*9.5* பள்ளிகளில் குழந்தை உரிமை பாதுகாப்பு

*9.6* தொகுத்தல்

*9.7* பரிந்துரைக்கப்பட்ட மேற்கோள் நூல்கள்

*9.8* அலகு முடிவின் பயிற்சிகள்

குறிப்புகள்

## 9.0 முன்னுரை

பள்ளிக்கல்வியில் சமத்துவம் என்பது முக்கிய பிரச்சினையாக உள்ளது. பலவகையான வீட்டுச் சூழ்நிலையில் இருந்து இந்திய மாணவர்கள் பள்ளிக்கு வருகின்றனர். பள்ளி மாணவர்களில் ஒரு சிலர் வீட்டிலேயே இணையதளத்தை பயன்படுத்தக் கூடிய வசதிகளைப் பெற்றுள்ளனர். ஆனால், இதற்கு நேர்மாறாக சில மாணவர்கள் தினசரி செய்தித்தாள் வாங்கி படிக்கக்கூடிய நிலையில் இல்லை. மேலும் ஒரு சில பெற்றோர்கள் சிறந்த கல்வியறிவு பெற்று தங்களது குழந்தைகளுக்கு கல்வி வழிகாட்டியாகவும் உள்ளனர். வேறு சில பெற்றோர்களோ இதற்கு மாறாக கல்வியறிவு இல்லாதவர்களாகவும், கல்வியின் சிறப்பை அறியாதவர்களாகவும் உள்ளனர். கல்வி பெறுவது என்பது ஒரு சில சமுதாயத்திற்கு எளிதில் எட்டாக் கனியாகவும் உள்ளது. இந்த மிகப்பெரிய இடைவெளியை இணைப்பது என்பது இன்றைய சவால். இந்த அலகின் மூலம் முதல் தலைமுறை மாணவர்கள் எவ்வாறு பள்ளிக் கல்வி மூலம் பயன்பெறுவது என்பதை விளக்குகிறது.

## 9.1 கற்றல் நோக்கங்கள்

இந்த அலகை மாணவ ஆசிரியர்கள் கற்பதன் மூலம் அறிபவை,

- பலவகையான பள்ளி செல்லும் மாணவர்களை பற்றி புரிந்து கொள்ளுதல்.
- சமூகத்தில் பின்தங்கிய பிரிவினரின் கல்வி பிரச்சினைகளை உணர்ந்து கொள்ளுதல்.
- முதல் தலைமுறை கற்றல் மாணவர்களுக்கு பள்ளிப் பாடங்களை கற்பிப்பதில் திறன் பெறுதல்
- பள்ளியில் மாணவர்களை சேர்த்தல் மற்றும் தக்கவைத்தலை மேம்படுத்தும் முறைகளை கையாளுதல்.
- அனைவருக்கும் கல்வியில் சமவாய்ப்பு அளிப்பதற்கான யுத்திகளை பின்பற்றுதல்.

## 9.2 சேர்த்தல் மற்றும் தக்கவைத்தல் தொடர்பான பிரச்சினைகள்:

இந்திய அரசியலைப்புச் சட்டப்படி 6 முதல் 14 வரையுள்ள குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வியை அரசாங்கம் வழங்க

குறிப்புகள்

கடமைப்பட்டுள்ளது. இந்த இலக்கை அடைய இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு பல்வேறு கட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. நாடு முழுவதும் பல தொடக்கப்பள்ளிகள் நிறுவப்பட்டன மற்றும் மாணவர்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகிலேயே அமையுமாறு உறுதி செய்யப்பட்டது. அந்தந்த கிராமங்களிலேயே பள்ளி வசதியை உருவாக்கிட பல இடங்களில் ஓர் ஆசிரியர் பள்ளி தோற்றுவிக்கப்பட்டது. இலவச கற்பித்தல் பொருட்கள், மதியஉணவுத் திட்டம், இலவச சீருடை மற்றும் பழங்குடியின பெண்களுக்கு உதவி போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் அனைவருக்கும் கல்வி என்ற நோக்கத்தை நிறைவேற்ற மத்திய மனித வள மேம்பாட்டு நிறுவனத்தால் (MHRD) தொடங்கப்பட்ட திட்டம் மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம் (DPEP). இந்தியாவில் பெண்களின் கல்வியறிவு தேசிய சராசரியைவிடக் குறைவாக உள்ள மாவட்டங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தின் அனைத்து முயற்சிகளும் பள்ளி மாணவர்களின் வருகை மற்றும் தக்கவைத்தலை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. அனைவருக்கும் கல்வித் திட்டம் (SSA) சார்பில் இந்த திட்டம் விரிவாக்கப்பட்டது. இந்த இரண்டு (SSA, DPEP) திட்டங்கள் மூலம் பள்ளியில் மாணவர்களின் சேர்க்கை மற்றும் வருகையில் சற்றே முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனாலும் 100 சதவீதம் மாணவர் சேர்க்கை மற்றும் தக்கவைத்தல் என்பது கனவாகவே உள்ளது. இந்த கனவு நிறைவேற நம்நாட்டின் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் பணி மிக முக்கியமானது.

## 9.2.1. ஆதிதிராவிட குழந்தைகளுக்கான கல்வி

பழங்காலத்தில் இந்தியாவில் நிலவிய சாதி அமைப்பின் காரணமாக சில மக்களை தீண்டத்தகாதவர்கள் என்று வகைப்படுத்தினர். அவர்கள் அடிமையான வேலை செய்து வந்தனர். அவர்களுக்கு கல்வியானது எட்டாக்கனியாக இருந்தது. இந்தியா சுதந்திரா அடைந்த பிறகு தீண்டாமை என்பது சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டது. ஆயினும் ஆதிதிராவிடரின் நிலையினை உயர்த்துவதற்காக சில சலுகையினை அரசு அளித்துள்ளது. அவர்களுக்கு அரசியமைப்பு சட்டம் மூலமும் உறுதியித்துள்ளது. இலவசமாக பள்ளிக்கல்வி மட்டுமல்லாது இட ஒதுக்கீடு மூலம் உயர்கல்வியையும் வழங்குகிறது. இந்த நடவடிக்கைகள் மூலம் ஆதிதிராவிட மாணவர்களின் சேர்க்கை பள்ளிகளிலும், கல்லுரிகளிலும் உயர்ந்துள்ளது. அவர்களில் பலர் உயர் கல்வியை வெற்றிகரமாக முடித்திருக்கிறார்கள். ஆதிதிராவிட மக்களின் கல்வியறிவு கடந்த அறுபது ஆண்டுகளாக ஒரு நிலையான வளர்ச்சியை அடைந்து கொண்டிருக்கிறது. இதை முழுமையாக நிறைவேற்ற மேலும் பல திட்டங்கள் தேவை.

குறிப்புகள்

சிலசமயம் பள்ளிகளில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு தனியாக இருக்கைகள் ஒதுக்கப்பட்டன. மேலும் உயர் வகுப்பு மாணவர்களுடன் ஒப்பிடும்போது ஆதிதிராவிட குழந்தைகளை தகாத முறையில் கடுமையாக தண்டிக்கும் பழக்கம் பள்ளியில் இருந்தன. உதாரணமாக, தாமதமாக பள்ளிக்கு வருகைபுரியும் மாணவர்களை திட்டுவது, அவர்களுக்கு என்று நேரமோ, கவனமோ ஒதுக்காதது அவர்களுடைய சந்தேகங்களுக்கு விடையளிக்காதது அவர்கள் கேட்கும் வினாக்களுக்கு விடையளிக்க மறுப்பது இல்லையென்றால் திட்டுவது போன்றவை ஆதிதிராவிட மாணவர்களுக்கு பள்ளியில் நடைபெற்ற தீண்டாமை கொடுமைகள் சில எளிதில் கண்டறியப்படாத கொடுமைகளும் நடந்தன. காலை வழிபாட்டு கூட்டத்தில் கலந்து கொள்ள விடாமல் செய்தல், பொது நிகழ்வுகளான குடியரசு தின விழா, சுதந்திர தின விழா போன்றவற்றில் கலந்து கொள்ளவிடாது செய்தல். பள்ளிகளில் தண்ணீர் வசதி கூட இல்லாதிருத்தல், கல்வியறிவில் பின்தங்கியுள்ள மாணவர்களை தரக்குறைவாக நடத்துதல். துப்புரவு பணி மட்டுமல்ல, கழிவறை தூய்மை செய்தல் போன்ற கீழ்த்தரமான பணிகளில் மாணவர்களை ஈடுபடுத்துதல். விளையாட்டு மைதானம் மற்றும் வகுப்பு இடைவெளியின் போது உயர்பெருங்குடி மாணவர்கள் சிறுபான்மை இன மாணவர்களைப் புறக்கணித்தனர். இதன் விளைவாக பள்ளிக்கு அருகாமையில் உள்ள பள்ளி செல்லா சிறுபான்மையின மாணவர்களுடன் மட்டுமே இவர்கள் விளையாட்டில் ஈடுபட்டனர்.

சிறுபான்மையின மாணவர்களின் தேவைகளின் அடிப்படையில் தீவிர குறுகிய கால திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். பள்ளியில் மற்ற மாணவர்களுடன் சிறுபான்மையின மாணவர்கள் ஒருங்கிணைந்து செயல்பட பின்வரும் கருத்துக்கள் பரிந்துரைக்கப்படுகிறது.

1. பள்ளியில் ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கான நடத்தை விதிகளை நிறுவுதல்.
2. ஆசிரியர்கள் அல்லது பள்ளி ஊழியர்கள் அல்லது மாணவர் களால் மேற்கொள்ளப்படும் பிரிவினைச் செயல்களை உடன டியாக கண்டறிதல், இதனை கண்டறிவது சிரமம். ஏனெனில், இதில் சில செயல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைகள் ஆகும்.
3. பாதிக்கப்பட்ட மாணவர்களின் குரலை கேட்பது முக்கியமான பயிற்சியாகும்.
4. பிரிவினைவாதம் என்பது பள்ளியில் முதலிலேயே தொடங்குவதால் புகார்பெட்டி பள்ளிகளில் வைத்து தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். மாணவர்களின் ஒருங்கிணைந்த தன்மையை வளர்க்க வேண்டும்.



குறிப்புகள்

5. மாணவர்களை, சாதி, சமூகம் மற்றும் பாலினம் அடிப்படையில் அமர வைக்கக் கூடாது என்பதை பள்ளிகளில் நடைமுறைப் படுத்துதல். இதற்கு முன்னோடியாக தொன்னூறுகளில் கர்நாடகாவின் நடுப்பகுதியில் நலிகாளி(Nali-Kali) மாதிரி பல்வகை கற்றல் (Multilevel Learning) பள்ளி உள்ளது, இதில் வகுப்பறையில் மாணவர்கள் கற்றலின் அடிப்படையில் உள்ளன. சாதி, சமயம் மற்றும் பாலின வேறுபாடு இல்லாமல் உள்ளது. இது சமூக தடைகளை உடைப்பது மட்டுமல்லாமல் கற்றலில் ஒரு சுழற்சியை ஏற்படுத்துகிறது.

6. கல்வி இணைச் செயல்பாடுகளான விளையாட்டு,. இசை மற்றும் நாடகம் போன்றவை சமூக இனத்தடைகளை தகர்க்க உதவுகிறது. பல்வேறு தரப்பட்ட மாணவர்களிடையே இடைவினை புரியவும், ஒற்றுமை உணர்வை வளர்க்கவும் உதவுகிறது. மேலும், பல்வேறுபட்ட நிலைகளிலிருந்து வரும் மாணவர்களின் திறனை வெளிக்கொணரவும் மற்றும் அங்கீகரிக்கவும் உதவுகிறது.

7. பள்ளி மாணவர்கள்அனைவரையும் ஒருங்கிணைத்தல் என்பது ஆசிரியரின் முக்கிய பணியாக உள்ளது. ஆனால், அவர்களுடைய பங்கு இங்கு புறக்கணிக்கப்படுவதாக உள்ளது. அதனால் ஆசிரியர் பயிற்சியின் (Preservice Training) போதே பயிற்சி கட்டகத்தில் இடம்பெற்று மாணவ ஆசிரியர் பயிற்சி பெறுவது என்பது அவசியமாகிறது. வட்டார அளவில் ஏற்படும் வேறுபாடுகளை களைய பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு முறையான திட்டமிட்ட பயிற்சியை வழங்குவது அவசியமாகிறது.

8. கட்டாய இலவச கல்வி உரிமைச் சட்டத்தில் (RTE) குறிப்பிட்ட விதிமுறைகள் போல் உடல் ரீதியான தண்டனைகளை அளிக்கக்கூடாது என்பதை கண்காணிப்பு செய்தல். இதனை பள்ளி மேலாண்மை குழு (SMC) மூலம் மேற்பார்வை செய்தல். சமூகத் தடைகளை உடைக்கும் கற்பித்தல் யுத்திகளை வட்டார வளமையம் (BRC) மற்றும் குறு வளமையம் (CRC) மூலமாக ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்.

9. மாவட்டங்களில் ஆதிதிராவிட மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் உள்ள தொடக்கப்பள்ளிகளின் உள் கட்டமைப்பை மேம்படுத்தி அவர்களின் கற்கும் வாய்ப்பினை மேம்படுத்துதல். மேலும் அப்பகுதியில் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் பொருட்டு கல்வித்துறையின் சார்பாக திறந்தநிலைப் பள்ளிகளை (Opening Schools) ஏற்படுத்த வேண்டும்.

குறிப்புகள்

10. ஆதிதிராவிட மக்களின் கற்றல் தடைகளை அறிய முறையான ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாது கற்றலை அடைவினையும் மேம்படுத்த வேண்டும்.(குல்கர்னி மற்றும் அகார்கர் 1985).

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் அனைத்தும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு பொதுவாக நடைபெற்றது. மேலும் ஒவ்வொரு பகுதியிலும் என்னென்ன பிரச்சனைகளை ஆதிதிராவிட மாணவர்கள் அடைகின்றனர். அதனை எவ்வாறு நீக்குவது என்பதை பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## செயல்பாடு 1

இந்தியாவில் உள்ள ஆதிதிராவிட (SC) மாணவர்களின் தகவல்களை அறிந்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. 1950 ல் ஆதிதிராவிட மக்களின் எழுத்தறிவு நிலை என்ன?

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

2. தற்பொழுது அவர்களின் எழுத்தறிவு நிலை என்ன?

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

3. ஆதிதிராவிட மக்களின் எழுத்தறிவு நிலை பொது முன்னேற்றத்துடன் பொருந்துகிறதா?

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

4. ஆதிதிராவிட மக்களின் ஆண், பெண் எழுத்தறிவு நிலையில் ஏதேனும் வேறுபாடு உள்ளதா?

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

## 9.2.2. பழங்குடியின குழந்தைகளுக்கான கல்வி

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 46 பழங்குடி மக்களின் நலனை பிரதிபலிப்பதாக உள்ளது. இதில் மாநிலங்களில் தங்கள் மாநிலத்தில உள்ள பழங்குடியின மக்கள் கல்வியறிவு மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த வலியுறுத்துகிறது. ஆதிதிராவிட மக்களைபோல் பழங்குடியின மக்களையும் வகைப்படுத்தியுள்ளனர். பழங்குடியின மாணவர்களுக்குப் பள்ளி மற்றும் கல்லுரிகளில் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. பழங்குடியின மக்கள் ஒரு சில மாநிலங்கள் தவிர அனைத்து மாநிலங்களிலும் உள்ளனர். பழங்குடி மக்கள் அனைவரும் ஒரே வகையானவர்கள் இல்லை. அவர்களுடைய கல்வியறிவு மற்றும் சமூக பொருளாதார நிலை பல்வேறு நிலைகளில் உள்ளது. பெரும்பான்மையான பழங்குடியின மக்கள் கல்வியில் பின்தங்கிய நிலையில் உள்ளனர். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு அவர்களின் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மாவட்ட தொடக்கக்கல்வித் திட்டம் (DPEP) மூலம் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பழங்குடியின மாணவர்கள் அருகில் உள்ள பள்ளிகளில் சேரவும், பள்ளிக்கல்வி முடியும் வரை தொடர்ந்து பள்ளிகளில் தக்கவைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அனைவருக்கும் கல்வி இயக்ககமும் இதே பணிகளை தொடர்ந்து, செய்தாலும் அத்தனை முயற்சிகளும் திருப்திகரமான நிலையில் மட்டுமே உள்ளது. எனவே, சிறப்பு கவனம் தேவைப்படுகிறது.

பழங்குடியின மக்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு வாழ்க்கை முறையுடன் உள்ளனர். மேலும் அவர்களை ஒருங்கிணைப்பதில் பிரச்சினைகள் உள்ளன. பழங்குடியின மக்களிடமிருந்து எழும் முக்கிய பிரச்சினை மற்ற மக்களிடமிருந்து பிரிந்து தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பது. பழங்குடியின மக்கள் பெரும்பாலும் மலைப்பிரதேசங்களில் உள்ளனர். அந்தப் பகுதிகள் தொலைவிலும் மற்றவர்கள் எளிதில் அணுகாவண்ணம் அமைந்துள்ளது. அவர்களின் பொருளாதார நிலை குறைவாக உள்ளதால் அவர்களின் குழந்தைகளையும் வேலைக்கு அனுப்பி விடுகின்றனர்.

பழங்குடியின மக்கள் தங்களுக்குள் உரையாட பேச்சு வழக்கில் மொழிகளை பயன்படுத்துகின்றனர். இதனால் அவர்கள் பிராந்திய மொழிகளை பயன்படுத்தும் திறமை குறைவாகவே உள்ளது. அவர்களின் இருப்பிடம் பள்ளிகள் அமைப்பதற்கு ஏற்ற சூழ்நிலைகளில் இல்லை. பழங்குடியின மக்கள் நாடோடியாக வாழும் சூழ்நிலையில் உள்ளனர். ஏனெனில் அவர்களின் வாழ்வு ஆதாரத்திற்காக மாநிலத்திற்கு உள்ளோ அல்லது அண்டை மாநிலத்திற்கோ சென்று பிழைப்பு தேடும் நிலையில் உள்ளனர். இதனால் பழங்குடியின குழந்தைகள் வருடம் முழுவதும் ஒரு




பள்ளியில் கல்வி பயில்வது என்பது அவர்களுக்குப் பிரச்சினையாக உள்ளது. அதனால் சிறப்பு கவனம் அளித்து பழங்குடியின மாணவர்களைப் பள்ளிகளில் சேர்த்தல் மற்றும் தக்கவைத்தல் அவசியமாகிறது. சில முக்கிய நடவடிக்கைகள்

- பிராந்திய மொழி புரியாத குழந்தைகளுக்காக தொடக்க நிலையில் உள்ள மாணவர்களுக்கு தாய்மொழி பாடப்புத்தகங்கள் உருவாக்குதல்.
- ஆசிரியர்கள் பயன்படுத்தும் வகையில் இணைப்பு மொழியை பயன்படுத்துதல்/ உருவாக்குதல்.
- குழந்தைகளை வளர்ப்பதற்கான பெண் குழந்தைகள் பள்ளி வராமல் இருப்பதை தடுக்க பழங்குடியின குழந்தைகள் பயிலும் பள்ளியிலேயே பால்வாடி, அங்கன்வாடி மற்றும் சிசுவகங்கள் (Creaches) நிறுவுதல்.
- பழங்குடியின மக்கள் அல்லாத ஆசிரியர், அப்பகுதியில் பணிபுரியும்போது, அப்பகுதியில் பணிபுரியவும் மற்றும் அவர்களின் மொழியை புரிந்து கொள்ளவும் சிறப்பு பயிற்சிகள் அளித்தல்.
- பள்ளிகள்/ கல்வி உறுதியளிப்பு திட்டம் (EGS) போன்ற மாற்றுவசதிகளை அவர்களின் இருப்பிடத்திற்கு ஒரு கி.மீ தொலைவிலேயே அமைத்தல்.
- கல்வி உறுதியளிப்பு திட்ட பள்ளிகளை மற்ற பள்ளிகளைப்போல தரம் உயர்த்துதல்.
- மாற்று புதுமைப் பள்ளிகளில் பயிலும் பள்ளி செல்லா குழந்தைகளுக்கு சிறப்பு முகாம்களை நடத்துதல்.
- பெண்கல்வி திட்டம் (Mahila Samakhya) போன்ற திட்டங்களை புதுமைக்கான நிதியிலிருந்து மேற்கொள்ளுதல்.
- சமுதாய பங்கேற்பில் பெண்கள் மற்றும் SC/ST பெற்றோர்களைப் பள்ளிகளில் பங்கேற்கச் செய்தல்.
- பெண்கள் மற்றும் SC/ST குழந்தைகளின் கல்விக்கென சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்தல். இதில் புதுமையான திட்டங்களை புகுத்துதல் சேர்க்கை மற்றும் தக்கவைத்தல், சிறப்பு முகாம்கள் மற்றும் இணைப்பு வகுப்புகள் சிறந்த மாற்று மாற்றுப்பள்ளியை உருவாக்குதல்.

புதிய பணியார்களின் குழு பணியுள்ள பிரிவினரையும் இணைந்து செயல்படுமாறு சமுதாயம் அணி திரட்டுதல்.

வருகையை கண்காணிக்க, மாற்றுப்பயிற்சி வகுப்புகளுக்கு, கற்றலுக்கு உகந்த சூழ்நிலையினை பள்ளிக்கு உள்ளேயும்/வெளியேயும் உருவாக்கித் தருதல்.

- சமுதாய தலைவர்களுக்கு பயிற்சிகள் மூலம் அவர்களின் திறனை மேம்படுத்தி பள்ளியை சிறப்பாக மேலாண்மை செய்ய வைத்தல். மாணவர்களின் கல்வித்தரத்தை மேற்பார்வை செய்ய வட்டார வளமையம் மற்றும் பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையம் (BRC/CRC) ஏற்படுத்துதல்.
- இலவசமாக பாடநூல்கள் குழந்தைகளுக்கு எட்டாம் வகுப்புவரை வழங்குதல், இலவச தங்கும் விடுதி உணவு வசதியுடன் ஏற்படுத்துதல், மேலும் கழிவறை வசதிகள், குறிப்பேடுகள், சீருடைகள் மற்றும் பிற போன்றவற்றை ஏற்பாடு செய்துதரல்.
- தொடக்கம் மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் போதுமான அளவு கற்றல் மற்றும் கற்பித்தல் உபகரணங்களை வழங்குதல்.
- பள்ளி மற்றும் ஆசிரியர்களுக்கான நிதி ஒதுக்கீடு அனைத்து ஆசிரியர்களுக்கும், சமுதாய கண்காணிப்பு ஆராய்ச்சியில் மற்ற நிறுவனங்களுடன் பங்கேற்பு மற்றும் சீரான இடைவெளியில் பின்னூட்டம் பெறுதல்.

## ஆசிரம பள்ளிகளுக்கான தர மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடியின முன்னேற்ற துறையின் சார்பாக அரசாங்கத்திடம் எழுப்பப்பட்ட கோரிக்கையின் காரணமான மகாராஷ்டிரா அரசாங்கம் ஆஸ்ரம பள்ளிகளில் அறிவியல் மற்றும் கணிதப் பாடத்தின் தரத்தை உயர்த்த திட்டம் மேற்கொண்டுள்ளது. (பழமையான இந்தியாவில் தங்கி உறையும் பள்ளிகளில் பழங்குடியின மக்களுக்கான கல்வி மறுக்கப்பட்டது) இந்த திட்டமானது ஹோமி பாபா நிறுவனம் மூலம் அறிவியல் கல்விக்கு 1993-97 வழங்கப்படுகிறது. இது ஷயாதிரி எல்லைக்குட்பட்ட மூன்று மாவட்டங்களில் நடைபெறுகிறது. (மகாராஷ்டிரா மாநிலத்தில் மேற்கு பகுதி) மேலும் இது மூன்று விஷயங்களில் கவனம் செலுத்துகிறது.

1. திறன் மேம்பாடு
2. ஆசிரியர் பயிற்சி மற்றும்
3. குழந்தை குழந்தையிடையே தொடர்பினை மேம்படுத்த

குறிப்புகள்

## 1. திறன் மேம்பாடு

பள்ளிகளில் நூலகம் மற்றும் ஆய்வக மேம்பாட்டை வலியுறுத்துகிறது. கல்வி சார்ந்தப் புத்தகங்கள் நூலகங்களில் எளிதாக கிடைக்கப்பெற்றால் அது திறமையாக பயன்படுத்தப்படும். அறிவியல் ஆய்வகம் தேவையான உபகரணங்களோடு மேம்படுத்தப்பட வேண்டும். மேலும் கணித ஆய்வகம் உருவாக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

## 2. ஆசிரியர் பயிற்சி

அறிவியல் மற்றும் கணித ஆசிரியர்களுக்கு ஆறு பயிற்சிகள் மூன்று ஆண்டு இடைவெளிக்குள் நடத்தப்படுகிறது. இந்தப்படிப்பின்போது கற்றலில் பழங்குடியின மாணவர்களுக்கு ஏற்படும் சிக்கலிலிருந்து அவர்களை வெளிக்கொண்டுவர வழிகாட்டுதல் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது. பழங்குடியின குழந்தைகள் கற்றலில் ஏற்படும் சிரமங்களை அறிந்து அதற்கான தீர்வுகளை விளக்கும் நூல்கள் ஆசிரியர்களின் மேற்பார்வைக்கு உள்ளன.

## 3. குழந்தை - குழந்தையிடையே தொடர்பினை மேம்படுத்த

ஆசிரமப் பள்ளிகளில் மாணவர்கள் வகுப்பறை நேரங்களுக்குப் பிறகு கூட ஒன்றாக உள்ளனர். இந்த நேரத்தை பயன்படுத்தி குழந்தைகளிடையே இடைவினை/தொடர்பை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

குழு விளையாட்டிற்கு பரிந்துரைக்கப்பட்டது. உதாரணமாக பத்திரிக்கை கட்டுரைகளை காட்சிப் பலகை/தகவல் பலகையில் காட்சிப்படுத்துதல் அல்லது அருகிலுள்ள தாவரங்களைப் பயன்படுத்தி மாணவர்களின் நிலைக்கேற்ப ஹெர்பேரியம் (Herbarium) தயாரித்தல். இவ்வகையான செயல்பாடுகள் மாணவர்களின் தொடர்பினை மேம்படுத்துவது மட்டுமல்லாது ஓய்வு நேரங்களை பயனுள்ள வகையில் செலவழிக்கவும் கல்வியில் முன்னேற்றத்தையும் அளிக்கிறது

## 9.2.3. சிறப்புத் தேவையுடைய குழந்தைகள் (CWSN)

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் (SSA) நோக்கம் நிறைவேற சிறப்பு தேவையுடைய குழந்தைகளும் தொடக்க நிலை கல்வி பெறுவது அவசியம். மாவட்டத் தொடக்க கல்வித்திட்டம் (DPEP) போன்று இதிலும் தேவையான அளவு ஆதரவு பணிகளை வழங்கியுள்ளது. வழக்கமான பள்ளிகளை போன்று சிறப்புத் தேவையுடைய குழந்தைகளுக்கும் (CWSN) தரமான கல்வியை வழங்குகிறது. சிறப்புத் தேவையுடைய குழந்தைகள் அவர்களின்

குறைபாடுகளை கொண்டே தரம் பிரிக்கப்படுகிறது. அவர்களின் ஆற்றல்/ திறன் பற்றிய அறியாமை பெற்றோர்கள் மற்றும் சமுதாயத்தினரிடம் உள்ளது. ஆசிரியர்களிடம் ஏற்பட்ட அச்சங்கள் காரணமாக அவர்களின் கல்வி உரிமை மறுக்கப்பட்டது.

பொதுவாக சமுதாயத்தினரிடம் இவர்கள் மீது அனுதாப மனப்பான்மை உள்ளது. ஏனெனில் அவர்களால் செய்ய இயலாத செயல்களை நினைத்தும், செய்யக்கூடிய செயல்களில் ஏற்படும் தடையை உணர்ந்தும் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளின் ஒருங்கிணைந்த கல்வியை உணர்ந்து கொண்டு அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA) இதற்கான கட்டமைப்பு உருவாக்கியுள்ளது. (SSA) யின் நோக்கம் ஒவ்வொரு சிறப்பு கவனம் தேவைப்படும குழந்தையும். எவ்விதமான பாகுபாடு, குறைபாட்டின் தன்மை பொறுத்து வேறுபாடு இல்லாமல் தரமான கல்வியை அனைவருக்கம் வழங்குவதை உறுதி செய்கிறது. இதனால் (SSA) யானது பூஜ்ஜிய நிராகரிப்பு கொள்கையை (Zero Rejection Policy) பின்பற்றுகிறது. இதன் பொருள் எந்த குழந்தையும் குறைபாட்டின் காரணமாக அவர்களுக்கு கல்வி உரிமை மறுக்கப்படக்கூடாது.

(இ) பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான கல்வித்தரத்தை மேம்படுத்துவதும் அவர்களுடைய முழுமையாக ஈடுபடுவதற்கு தடையாக இருக்கும். தடைகளை நீக்குவதுமே மிகவும் அவசரமான தேவையாகும்.

(ஈ) கல்வியில் உள்ள வேற்றுமைகளை களைவது முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது. போதிய குழுக்களின் மூலம் கல்வி வாய்ப்புகளில்

குறிப்புகள்

எவ்வித வேறுபாடுகளையும் பாதிக்காத வகையில் கண் காணிக்கிறது.

(உ) சிறப்பு தேவை உடையோர்களுக்கான கற்றல் தேவைகளில் சிறப்புக்கவனம் செலுத்தப்படுகிறது. எல்லாவகையான சிறப்பு தேவையுடைய குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வி அமைப்பை அனைவருக்கும் சமமாக வழங்குகிறது.

## (iv) கற்றலின் மீது கவனம்

விரிவாக்கப்பட்ட கல்வி வாய்ப்பு என்பது ஓர் அர்த்தமுள்ள வளர்ச்சியாகும். ஒரு தனி நபருக்கு அல்லது ஒரு சமுதாயத்திற்கு, அடிப்படை கல்வியில் கவனம் செலுத்துதல் கற்றலை முயன்று அடைதல் மற்றும் அதன் விளைவுகளைப் பொருத்ததாகும்.

## (v) அடிப்படைக்கல்விக்கான நோக்கத்தை விரிவுபடுத்துதல்

கற்பவர்களின் அடிப்படை கல்வித் தேவையில் உள்ள வேற்றுமை மற்றும் கடினத்தன்மையை மாற்றி விரிவான தேவையுடைய விளக்கங்களை அளித்தல் அடிப்படைக்கல்வியின் நோக்கமாக கீழ்க்கண்ட கூறுகள் உள்ளது.

கற்றல் பிறப்பிலிருந்து துவங்குகிறது.

- அடிப்படைக்கல்வியை வழங்குவதில் குடும்பத்திற்கு வெளியில், தொடக்கப்பள்ளி கல்வியின் மூலம் கிடைக்கிறது.
- இளையவர்கள் மற்றும் வயது வந்தோர்க்கான அடிப்படைக் கல்வித் தேவை பல்வேறு வழிகளின் மூலம் வழங்கப்படுகிறது.
- சமுதாயத்தில் உள்ள நிகழ்வுகளைக் கற்பிப்பதற்கும் போதிய அறிவை தெரிவிப்பதற்கும் பல வகையான தகவல் பரிமாற்ற தளங்கள் மற்றும் ஊடகங்களை பயன்படுத்தி கல்வி வழங்கப்படுகிறது.

## (vi) கற்றலுக்கான சூழலை மேம்படுத்துதல்

கற்பவர்கள் செயல் மிக்க கல்விப்பயனை பெறுவதற்கு அவர்கள் நல்ல ஊட்டத்துடனும் உடல் மற்றும் ஆரோக்கியத்துடனும் இருத்தல் அவசியம். குழந்தைகளின் கற்றல் சூழ்நிலைகளை மேம்படுத்தும் அறிவு திறனும் வயது வந்தோரின் சமுதாயக்கல்வியை நிகழ்வுகளைக் கற்றலில் ஒருங்கிணைந்து செயல்படுத்துவது அவசியம். குழந்தைகளின் கல்வி அவர்களின் பெற்றோர்


குறிப்புகள்

அல்லது பாதுகாவலர்கள் ஒருவருக்கு ஒருவர் இணைந்து செயல்படுவபர்களாகவும் இருத்தல் வேண்டும். இந்த ஒருங்கிணைப்பு அனைவருக்கும், கற்றல் சூழலில் ஆர்வமும், நெகிழ்வு தன்மையும் உள்ளதாக அமைக்கிறது.

## (vii) கூட்டு முயற்சியை வலுப்படுத்துதல்

தேசிய, பிராந்திய மற்றும் கல்வி அதிகாரிகள் அனைவரும் அடிப்படை கல்வி வழங்குவதற்குத் தனித்தன்மை வாய்ந்த பொறுப்புடையவர்களாவார். புதிய மற்றும் புத்துயிர் பெற்ற பங்குதாரர்கள் அனைத்து துணைத் துறைகளிலும் கல்விக்குப் புதிய வடிவங்கள் கொடுக்கின்றனர். ஆசிரியர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு முக்கிய பங்கு உள்ளது என்பது உணரப்படுகிறது. இந்த நிலையில் ஆசிரியர்களின் விதிமுறை மற்றும் நிலையை எது நிர்ணயிப்பது என்றால் அனைவரும் கல்வியைச் செயல்படுத்தும் காரணியாகும். இது அனைத்து நாடுகளிலும் அவசரமாக மேம்படுத்த வேண்டிய ஒன்றாகும்.

## (viii) ஆதரவு கொள்கை சந்தர்ப்பத்தை உருவாக்குதல்

சமூக, கலாச்சார, பொருளாதார துறைகளில் ஆதரவு கொள்கை அவசியமான ஒன்றாகும். இது அடிப்படைக்கல்வியின் பயன்பாட்டை உணரும் பொருட்டு ஒவ்வொரு தனிநபர் மற்றும் சமுதாய முன்னேற்றத்தில் பங்கு கொள்கிறது.

பொருத்தமான வர்த்தக பொருளாதார தொழிலாளர் வேலைவாய்ப்பு மற்றும் உடல்நலக் கொள்கைகள் கற்கும் திறனை அதிகரிக்கிறது. இது சமுதாய வளர்ச்சி மற்றும் பங்களிப்புகளில் ஒரு தூண்டு விசையாக உள்ளது.

## (ix) வளங்களைப் பகிர்ந்தளித்தல்

(அ) அனைவருக்குமான கல்வித்தேவையைப் பூர்த்தி செய்ய ஏற்கனவே உள்ள மற்றும் புதிய நிதி மற்றும் மனிதவளம், பொதுவியல் தனியார் மற்றும் தன்னார்வ அமைப்புகளில் இருந்து பெறப் படுவது அவசியம்.

(ஆ) மனித வளர்ச்சிக்குப் பொதுத்துறையின் ஆதரவு அனைத்து வளங்களிலிருந்தும் பெறப்படுவது அவசியமாகும். இதற்கு அனைத்து அரசு துறைகளும் பொறுப்பாகும்.

குறிப்புகள்

### 10.2.2. சர்வதேச ஒற்றுமையை வலுப்படுத்துதல்

(அ) அடிப்படைக் கற்றல் தேவைகளை எதிர்கொள்வதற்கான கூட்டத்திற்கு உலகளாவி மனிதஅமைப்பு பொறுப்பேற்கிறது. பன்னாட்டு ஒற்றுமை, சமத்துவம், சிறந்த பொருளாதாரம், தொடர்பு ஏற்கனவே உள்ள பொருளாதார வேற்றுமைகளைத் திருத்தம் செய்ய பயன்படுகின்றது. அனைத்து தேசங்களும், சிறந்த கல்வி கொள்கைகள் மற்றும் திட்டங்களை வடிவமைப்பதற்கான தரமான அறிவு மற்றும் அனுபவங்களைக் கொண்டுள்ளது.

(ஆ) அடிப்படை கல்வி வளங்களை மேம்படுத்த உண்மையான நீண்டகால கல்வி தேவைப்படுகிறது.

(இ) முதியோர் மற்றும் குழந்தைகளுக்கான அடிப்படைக்கற்றல் தேவைகள் உள்ளனவா என்பதை கட்டாயம் குறிப்பிடப்படவேண்டும.

(ஈ) அனைத்து தேசங்களும் ஒற்றுமையாகச் செயல்பட்டு இராணுவ வேலைவாய்ப்பு முடிதல் மற்றும் இடம்பெயர்ந்த மக்களைக் குடியேறச் செய்தலுக்குமுள்ள முரண்பாடுகள் மற்றும் விவாதங்களைத் தீர்க்கச் செயல்படவேண்டும். அமைதியான நிலையான சுற்றுச்சூழல் மட்டுமே ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த உறுதிமொழிக்கான நோக்கத்தைப் பெற்று பயனடைய உதவுகிறது.

ஜோம்தியின் மாநாட்டின் அடிப்படை தேவையைச் சந்திக்க இந்த கட்டமைப்பு செயலைக் கீழ்க்காணும் ஆறு முக்கியப்பகுதிகளை ஏற்கவேண்டும்.

### செயலின் முக்கியப்பகுதிகள்

(அ) குழந்தைப்பருவம் மற்றும் வளர்ச்சி செயல்பாடுகளை விரிவாக்கம் செய்தல்.

(ஆ) தொடக்கக்கல்வியைப் பூர்த்தி செய்வதில் உலகளாவிய அணுகுமுறை தேவை.

(இ) கற்றல் அடைவில் முன்னேற்றம்.

(ஈ) மூத்தோர் கல்வியின்மையைக் குறைத்தல்

(உ) அடிப்படைக்கல்விக்கான விரிவாக்கங்கள் மற்றும் இளையோர் மற்றும் மூத்தோர்களுக்கான திறன் வளர்ச்சி வழங்குதல்

குறிப்புகள்

(ஊ) தனிமனிதன் மற்றும் குடும்பத்தினரின் வாழ்க்கைக்கான அறிவுத்திறன் மற்றும் மதிப்புகளை உயர்த்துதல்.

## EFA பிரகடனத்தில் உள்ள அடிப்படைக்கொள்கைகள்.

## ஐந்து அடிப்படை கொள்கைகள்

(அ) சமத்துவம் அனைத்து தரப்பிலும் அணுகுதல் மற்றும் சமத்துவத்தை மேம்படுத்துதல்.

(ஆ) கற்பிக்க வலியுறுத்தல்.

(இ) அடிப்படை கல்வியின் நோக்கத்தையும், கண்ணோட்டத்தையும் விரிவுப்படுத்துதல்.

(ஈ) கற்பிக்கும் சுற்றுச்சூழலை வளர்த்தல்.

(உ) கூட்டுப்பங்காண்மையினை வலுப்படுத்துல்.

நடவடிக்கை திட்டம் மற்றும் பொதுக்கொள்கைகளின் மூலம் ணிதிகி இன் நடவடிக்கை திட்டம் மற்றும் பொதுக்கொள்கைகளின் மூலம் ணிதிகி இன் குறிக்கோள்கள் அமையப்பெற்றிருக்கின்றன.

## முக்கிய குறிக்கோள் மற்றும் இலக்குகள்

(அ) கி.மு.2000 வரை 80சதவீத விகிதம் முதன்மைக் கல்வியை முடித்தல் மற்றும் உலகளாவிய அணுகுதல்.

(ஆ) 1990 முதல் 2000க்குள் கல்வியறிவின்மை விகிதத்தை அதன் பாதியாக குறைத்ததுடன் பெண் கல்வியில் சிறப்பு கவனம் செலுத்தியது.

(இ) குறிப்பிட்ட வயதுக்குப்பின் கல்விச் சாதனைகளை மேம்படுத்தி அதன் விகிதத்தை நிலைநாட்டி உயர்த்தியது.

(ஈ) குழந்தைப் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகளை விரிவுப்படுத்துதல் மேலும் குடும்பம் மற்றும் சமூகத்தின் தலையீடுகள் முக்கியமாக ஊனமுற்றோர் மற்றும் ஏழை எளியோர்கள் மீதான கவனிப்பு.

## ஜோம்தியன் தாக்கம்

தேசிய அரசுகளிலும் மற்றும் அதன் கொள்கைகள். திட்டத்திலும் ஜாம்டியன் மாநாட்டின் பங்களிப்பு இருந்தது. ஜாம்டியன் மாநாட்டின்

பங்களிப்பு தேசிய அரசின் திட்ட நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

1. அடிப்படைக் கல்வியினை விரிவுப்படுத்தி அதனுள் இளைஞர்களுக்கான இளைஞர் கல்வி, பயிற்சி மற்றும் வாழ்க்கை திறன், குழந்தை பாதுகாப்பு போன்றவற்றை உள்ளடக்குவது மற்றும் முன் தொடக்கப்பள்ளி பருவ குழந்தைகளின் வளர்ச்சி.
2. EFA வளர்ச்சி திட்டத்துக்கு முன்னுரிமை கொடுத்தல்.
3. அமலில் உள்ள EFA வளர்ச்சி திட்டங்களில் சிறப்பு கூறுகளை உருவாக்கவும், முக்கிய கல்வி கொள்கைகளை முறைப்படுத்துதல், EFAஇல் உள்ள சிறப்பு அம்சங்களை மேற்கொண்டு புதிய கல்வித்திட்டங்களை உருவாக்குதல்.
4. பள்ளிகளின் முன்னேற்றத்திற்கான திட்டங்களைத் தீவிரப்படுத்தி அதனை விரிவுபடுத்துதல், தரத்தில் முன்னேற்றம். ஆசிரியருக்கு வளர்ச்சி, பாடத்திட்டச் சீர்திருத்தம், பாலின சமநிலை மற்றும் ஏழை எளியோர்களுக்குச் சிறப்பு கவனம்.
5. புதிய கல்வி வளர்ச்சி திட்டங்களை துவக்குதல்.

## தேசிய அரசுகளின் தாக்கம்

(அ) திட்டமிடுதலின் திறனை வளர்க்க சிறப்பு தனி முயற்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் கல்வி அமைப்புகளை மேலாண்மை செய்தல்

(ஆ) கல்வித்துறை திட்டமிடுதல் மற்றும் மேலாண்மை அமைப்புகளை அனைத்து கல்வி நடவடிக்கைகளிலும் பரவலாக்கப்படுதல்.

(இ) சமூக பங்களிப்பு வளர்ச்சிக்கான நெறிமுறையை வளர்க்கச் செய்தல்.

(ஈ) அரசாங்கம் மற்றும் அரசாங்கமற்ற அமைப்புகளின் கூட்டுப் பங்களிப்பைப் போலியாக்குவது.

## புதிய முயற்சிகளைத் துவக்குதல்

1. வரி மற்றும் வரி ரீதியான சட்டங்களை உருவாக்கி அதன் மூலம் உள்நாட்டு வளங்களை அணிதிரட்டுவது.
2. பணமாகவோ பொருளாகவோ வளங்களைச் சமூகத்திலிருந்து திரட்டுவது. மேலும் மனித வளங்களைத் திரட்டி திட்டமிடுதல்.

குறிப்புகள்

மேலாண்மை மேற்பார்வை மற்றும் பள்ளி நடவடிக்கைகளைக் கண்காணித்தல். மேலும் அமைப்பு வேலைகளைச் செய்வதற்கும் மனித வளங்களைத் திரட்டுவது.

3. இருதரப்பு மற்றும் பலதரப்பு வளங்களின் மூலத்தை வெளியில் இருந்து திரட்டுவது. (வெளிநாட்டு உதவி)

## 10.2.3. E-9 நாடுகளில் ஜோம்தியனின் தாக்கம்.

அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகளான பங்களாதேஷ், பிரேசில், இந்தியா, சீனா, இந்தோனேசியா, மெக்ஸிகோ. நைஜீரியா மற்றும் பாகிஸ்தான் E-9 நாடுகள் என அழைக்கப்படுகின்றன. 2000 ம் ஆண்டு ஜனவரி 31 முதல் பிப்ரவரி 2 வரை இந்த நாடுகள் அனைத்தும் பிரேசிலில் உள்ள ரெசிபெஃ யில் கூடி அவர்களது நாடுகளில் EFA இன் வளர்ச்சியை மீளாய்வு செய்தது. ஜோம்தியன் மாநாடு 1990லும் E-9 நாடுகளின் EFA உச்சி மாநாடு 1993 லும் டில்லியில் நடந்தது. இது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இந்த 9 நாடுகளில் இருப்பதைக் கண்டறிந்தது.

## ஜோம்தியன் மாநாட்டின் மூலம் ணி9நாடுகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் / சாதனைகள்:

- இளமை படிப்பறிவின்மையைப் பெரிதாகக் குறைத்தது.
- குழந்தை பருவ கல்வியில் நல்ல முன்னேற்றம் மூலம் பெற்றோர்கள் ஆதரவை பெற்று அவர்களின் ஈடுபாட்டினை அதிகரிக்கச் செய்தது.
- முன்பள்ளி கல்விச் சேவைகளில் கணிசமான முன்னேற்றம்.
- உலகளாவிய தொடக்கப்பள்ளியில் நல்ல முன்னேற்றம்.
- பள்ளி மாணவ மாணவிகளுக்கிடையேயான பாலின சமத்துவத்தில் முன்னேற்ற நிலை மேலும் பள்ளி வருகைப்பதிவு ஏடுகளிலும் வளர்ச்சி.
- நடத்தைகளில் வளர்ச்சியினை வெளிகொணருதல் மற்றும் சகவாழ்வு.
- பொது கல்வியினை மதித்தல்.
- கல்விச் சேவைகளைப் பரவலாக்கப்படுதல்.
- தேசிய பாடத்திட்ட வேலைகளில் முன்னேற்றம்.

குறிப்புகள்

- முக்கிய பள்ளிகளில் சிறப்பு கவனம் தேவைப்படக்கூடிய குழந்தைகளுக்கான எண்ணிக்கை அதிகரிப்பதில் வளர்ச்சி.
- தொலைதூர கல்வி முறையினை பயன்படுத்திக் கற்பித்தலை வளர்த்தல் மற்றும் ஆசிரியர் பயிற்சி பெறுதல்.
- தனிப்பட்ட இலக்குகளைக் கொண்டு குழுக்களுக்கான திட்டங்களை உள்ளடக்கிய ஊக்கங்களுடன் மேம்படுத்துதல்.
- தேசிய தரவுத்தளத்தை மேம்படுத்துதல். கல்விக்கான மதிப்பீடு மற்றும் அங்கீகார முறைமைகள்.
- அரசு சாரா அமைப்பு, சிவில் சமூகம் மற்றும் தனியார் துறை ஆகியவற்றுடன் கொண்ட கூட்டுப்பங்காண்மையை விரிவடையச் செய்தல்.
- ஊடகத்தின் மூலமாகவும் ஆலோசனை மூலமாகவும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

## 10.2.4 தெற்காசிய நாடுகளில் ஏற்பட்ட தாக்கம்

தெற்கு ஆசிய நாடுகளில் பல புதிய முயற்சிகள் செய்யப்பட்டது. மேலும் பெரிய வகையான உத்திகள், திட்டங்கள் போடப்பட்டும் நிறைவேற்றியும் முடிக்கப்பட்டன. இலக்குகள் அனைத்தும் மறு உறுதி செய்யப்பட்டு. பரிசீலிக்கப்பட்டு மேலும் புதிய இலக்குகள் உருவாக்கப்பட்டன. மேலும் இலக்குகளின் தேதிகளும் நிர்ணயிக்கப்பட்டு, முன்னேற்றத்தினையும், தலையீடுதலையும் கண்காணிக்கப்பட்டும் வடிவமைக்கப்பட்டும் வந்தன. இலக்குகள் தயார் செய்யப்படும்போது, சில இலக்குகள் அமையப்பெற்றிருந்தது. தெற்கு ஆசிய நாடுகளுள் பங்களாதேஷ். பூட்டான், இந்தியா, மாலத்தீவுகள். நேபாள். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கையும் உள்ளடங்கும்.

## ஜோம்தியன் மாநாட்டிற்குப் பின்பு தெற்காசிய நாடுகளின் வளர்ச்சி

- முதன்மை கல்வியின் ஆட்சேர்க்கையை அதிகரித்தல்.
- குழந்தைப் பாதுகாப்பு, மற்றும் குழந்தைத் திட்டங்களில் விரிவுப்படுத்துதல்.
- செயல்பாட்டு கல்வியறிவில் வளர்ச்சி.
- கல்வித்தகவல் மேலாண்மை அமைப்பில் முன்னேற்றம்.

- அடிப்படைக்கல்விக்கான வரவு, செலவுப் பட்டியலை அதிகரித்தல்.
- உள்நாட்டு வளங்களை முறையாகப் பயன்படுத்துவது.
- அடிப்படைக்கல்விக்கான சர்வதேச உதவிகளை அதிகரிக்கச் செய்தல்.
- சட்ட நடவடிக்கைகளில், பிரச்சாரத்தில், திட்டத்தில் மற்றும் அடிப்படைக் கல்வியின் சீர்திருத்தத்தில் வளர்ச்சி.
- அடிப்படைக் கல்வியின் சீர்திருத்தத்தில் வளர்ச்சி.
- அடிப்படைக்கல்வியில் பல புதுமையான முயற்சிகள்.
- தனியார் துறை மற்றும் சிவில் சமூகத்திற்கிடையே பல கூட்டுப்பங்காண்மை.
- EFA இன் இலக்குகளை அடைவதற்கு ஐக்கிய நாடுகளின் முகவர்களை ஒன்று திரட்டிய ஜாம்டியனின் பங்களிப்பு முக்கியமானதாகும். மேலும் வளரும் நாடுகளிலுள்ள தன்னார்வ முயற்சிப்பவர்களுக்கு ஆதரவளிக்கிறது. ஜாம்டியன் பங்களிப்பு வினையூக்கப்படுத்தப்படுவதாகவும் நேரடியாகவும் உள்ளது.

## 10.3. வளரும் நாடுகளில் தொடக்க கல்வி முயற்சி

தொடக்கக்கல்வியின் உலகளாவிய அணுகுமுறை இன்னும் முழுமைப்பெறாத உறுதிமொழியாகவே இருக்கிறது. அனைவருக்கும் கல்வி உலக அறிவித்தல் / அறிவிப்புகற்பிப்பதற்கான அடிப்படை தேவை செயல்பாட்டிற்கான கட்டமைப்பு. அனைவருக்கும் கல்வி ணி9 நாடுகளின் அறிவிப்பு மனித உரிமைகள் பற்றிய நாற்பது (40) வருட உலகளாவிய அறிவிப்பு அடிப்படை கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கத்தைப் கொண்டிருக்கிறது.

வளர்ந்த நாடுகள் மற்றும் வளரும் நாடுகளின் அடிப்படை கல்வியின், நிலை மற்றும் தரத்தைப் பற்றியே நீங்கள் கற்ற போகிறீர்கள்.

இவ்வுலகில் 75 மில்லியன் குழந்தைகளின் அரை சதவீதம் பெண்குழந்தைகளுக்கு முதன்மை கல்வி பெற வாய்ப்புகள் இல்லை. ஆப்பிரிக்காவில் மூன்றில் ஒரு குழந்தை சமூகத்தில் பின்தங்கிய காரணத்தினால் முதன்மை கல்வியைக் கைவிடுகிறார்கள். ஒவ்வொரு 5 குழந்தைகளில் 4 குழந்தைகள் பள்ளி செல்லாதவர்கள் கிராமப்புறத்தில் வசிக்கிறார்கள். பல வளரும் நாடுகளில் பெண்கள் பள்ளிகளில் சேருவதை

குறிப்புகள்

அவர்களது பழைய பழக்கவழக்கங்கள் தடுக்கிறது. துணை சுகாதார ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் தெற்கு மற்றும் மேற்காசிய நாடுகளில் ஆண்களுக்கு கல்வி அளிப்பதில் முக்கியத்துவம் காணப்படுகிறது. மேலும் துயரங்கள் மற்றும் போர்களால் பல குழந்தைகள் பள்ளிக்குச் செல்வது தடுக்கப்படுகிறது. பல நாடுகளில் உள்நாட்டுப்போர் பெரும்பான்மையான பள்ளிக்கூடங்களை அழித்துவிட்டது. வளரும் நாடுகளில் தொடக்கக்கல்விக்குத் தடையாக இருக்கக்கூடிய காரணங்களைக் கீழே காணலாம்.

## நிதி பற்றாக்குறை

பல வளரும் நாடுகளில் தொடக்கக் கல்விக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியானது மிகவும் குறைவு. அது அவர்களின் தேவையை அடைவதற்கும், அனைவருக்கும் கல்வி வழங்குவதற்கும் தேவையானதாக இல்லை. இந்நாடுகளில் அதிக நிதயை ஒதுக்கினால் மட்டுமே கல்வி வளர்ச்சி அடைய முடியும். அதிக பணியாளர்களுக்குக் குறைவான நிதி ஒதுக்கீடு, நிர்வாகத் திறனின்மை மற்றும் ஊழல் போன்றவை அனைவருக்கும் கல்வி வழங்குவதில் தடைகளாக உள்ளன.

## பள்ளி மற்றும் ஆசிரியர்கள் எண்ணிக்கை குறைவு

முழுமையான தொடக்கப்பள்ளிக்கான தொடர்பானது கிராமங்களிலும், மற்றும் பின் தங்கிய மாவட்டங்களிலும் குறைவாக உள்ளது. கிராமத்துக் குழந்தைகள் அடிக்கடி பள்ளிக்காக மிகவும் அதிக தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளது. பெற்றோர்கள் பெண் குழந்தைகளை ஓரளவிற்கு தொலைவில் உள்ள பள்ளிகளுக்கு அவர்களது பாதுகாப்பு கருதி அனுப்புவதில்லை. பல பள்ளிகள் போதிய கட்டமைப்பு வசதிகள் இல்லாமல் உள்ளன. அவற்றில் பாடப்புத்தகங்களும், கற்பித்தல் உபகரணங்களும் இல்லை. நீர், மீன்சாரம், மாணவர்களுக்கான போக்குவரத்திற்கான நிதி நிறைய பள்ளிகளில் இல்லை.

ஆசிரியர்களின் பணிநிலை ஏற்புடையதாக இல்லை. ஒரே நாளில் மிக அதிக அளவில் மாணவர் எண்ணிக்கை உள்ள வகுப்புகளில் பல ஆசிரியர்கள் இரண்டு அல்லது மூன்று நேரங்களில் பாடம் நடத்த வேண்டியுள்ளது.

பல ஆசிரியர்கள் குறைவான பயிற்சியுடையவர்களாகவும் மற்றும் முறையான தயார் நிலையில் இல்லாமலும் பள்ளிகளில உள்ளனர். துணைசாரா ஆப்பிரிக்காவில் பல நாடுகளின் ஆரோக்கியப் பிரச்சினைகளும் எதிர்கொள்ளப்படுகிறது. நாட்டின் சில இடங்களில் உள்ள பல ஆசிரியர்கள்

குறிப்புகள்

உதவி பெறும் பள்ளிகளில் ஒப்பந்த பணியாளர்களாகப் பணியமர்த்தப்பட்டுள்ளன. அப்பள்ளிகள் கட்டாயத்தின் அடிப்படையில் மூடப்பட்டுள்ளன. பல வளர்ந்த நாடுகளில் குறைந்தளவே தரமான கற்பித்தல் பிரச்சினையை எதிர்கொள்கின்றனர். அன்றாட வாழ்க்கையின் உண்மை நிலையைக் குறைந்தளவு சார்ந்தே கற்பித்தல் நேரமும் பாடத்திட்டமும் அமைந்துள்ளது. குழுச் செயல்பாடு, சுதந்திரமான கற்றல். கூர்சிந்தனை மற்றும் பிரச்சினைத் தீர்த்தல், புதிய தொழில் நுட்பத்தில் பயன்பாடு மற்றும் வாழ்வியல் திறனின் முன்னேற்றம் போன்றவை தேவைக்குக் குறைந்தளவே முன்னேறியுள்ளது.

## பள்ளி செல்வதற்கு ஆகும் செலவு

வளரும் நாடுகளில் பள்ளி கட்டணங்கள் கட்டுவதற்கு, கற்றல் உபகரணங்கள் பெறுவதற்கும் மற்றும் போக்குவரத்து செலவுகள் செய்வதற்கும் இயலாத நிலை உள்ளது. ஒருசில நாடுகளில் பள்ளிக்கட்டணம் முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளது. பல குடும்பங்களின் வருமானம் அவர்களது குழந்தைகளைச் சார்ந்து உள்ளது. 5 முதல் 14 வயதுடைய ஏறத்தாழ 166 மில்லியன் குழந்தைகள் 16மணி நேரம் வேலை செய்பவர்களாக உள்ளன.

துணை சகாரா ஆப்பிரிக்காவில் நான்கில் ஒரு குழந்தையும், ஆசியாவில் ஐந்தில் ஒரு குழந்தையும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளன.

## அதிக எழுத்தறிவின்மை விகிதம்

வளர்ந்த நாடுகளில் 3050 சதவிகிதம் குழந்தைகள் 4 - 6 வயதுடைய குழந்தைகள் தொடக்கக்கல்வியை முடித்த பிறகும் எழுத்தறிவும். எண்ணறிவும் இல்லாமலே உள்ளது. 15-24 வயதுடைய 11 சதவிகித இளையவர்களின் வகுப்பறைகள் எழுத்தறிவின்றி உள்ளன. உலகில் வளரும் நாடுகளில் மொத்த எழுத்தறிவின்மை உடையோரில் 98 சதவீதம் பேர் முழுமையாக எழுதப்படிக்க தெரியாதவர்களாகவே உள்ளனர்.

## 10.4. UEE-இல் பன்னாட்டு முகவர்களின் பங்கு

உலக மயமாதலுக்கு தொடக்கக்கல்வி மற்றும் அதன் கல்வி அடைவை எட்டுவதில் வேகமாகவும், படிப்படியாகவும் பல்வேறு பன்னாட்டு முகவர்கள் உலகம் முழுவதும் செயல்படுகின்றது. உதாரணமாக உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி USAID, DFID, NORAD, CIDA, SIDA, SDC, UNESCO, UNICEF, UNFDA, UNDP, OPEC, மற்றும் SDC போன்றவை சில முக்கிய வெளி முகவர்களாக ணிதிகி வை ஒருங்கிணைக்கச் செயல்படுகின்றனர்.

குறிப்புகள்

## 10.4.1. UNESCO

ஐக்கிய தேசிய கல்வி அறிவியல் மற்றும் கலாச்சார நிறுவனம் (UNESCO) 1945 நவம்பரில் இலண்டன் மாநாட்டில் உருவாக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கமானது கல்வியின் மூலம் தேசங்களில் அமைதியின் மூலம் புரிதலை மேம்படுத்துவது. இதன் தலைமையகம் பாரிஸில் உள்ளது. பொருளாதார வளர்ச்சி மற்றும் அமைதிக்கான கற்றலைச் சார்ந்தது. யுனஸ்கோவானது நாடுகளுக்கு இடையேயானது அரசு நிறுவனமாகும். கல்வி வளர்ச்சிக்கான மனித வளங்களை வழங்குவதில் யுனஸ்கோ சுதந்திர நாடுகளுக்கு உதவி செய்கிறது. இது நாடுகளுக்கு அனைத்து நிலைகளிலும் கல்வியை மேம்படுத்துவதில் முயற்சி மேற்கொள்கிறது. நிதிஉதவி வழங்கும் நிறுவனங்கள் சில திட்டங்களைக் கொண்டு ஆசிரியர்களுக்குப் பயிற்சி மற்றும் பல பாடப்பிரிவுகளை வளர்க்கிறது. யுனஸ்கோ ணிதிகிஇல் பல செயல்பாடுகளை ஊக்குவிக்கிறது. 1990இல் நடந்த ஜோம்சியன் மாநாட்டிற்கு யுனஸ்கோ ஒரு ஆதரவாளராகச் செயல்பட்டன. ணிதிகி இயக்கத்தில் பல ஆலோசனைகளை முக்கிய பங்கு தாரர்களிடமிருந்து யுனஸ்கோ பெற்றுள்ளது. ணிதிகி இயக்கத்திற்கு ஆதரவான யுனஸ்கோவின் மூன்று முக்கிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. (1) செயல்திட்டம் தேசிய மாநில மற்றும் பன்னாட்டு அளவில் செயல்களை ஆராய்ந்து கொண்டு செல்லல் (2) தேசிய அளவிலான அனைவருக்கும் கல்வியியல் செயல்திட்டத்திற்கான வழிகாட்டிகளைத் தயாரித்தல். தேசிய ணிதிகி திட்டத்தில் உதவி செய்யும் நாடுகளின் திட்டத்தை மேம்படுத்துவதே இதன் நோக்கம் (3) அனைவருக்கும் கல்வியின் பங்குதாரர்களுடன் இணைந்து செயல்படுத்துவதற்கான ஆவணம். இந்த அறிவிக்கையில் ஒரு பகுதியாக உள்ள ணிதிகிஇல் தகவல் பரிமாற்றம் மின்னணு செய்திருப்பது முக்கிய நிகழ்வுகள் மற்றும் அடைவுகளை அவ்வவ்பொழுது பதிவிடுகிறது.

யுனெஸ்கோவின் அனைவருக்கும் கல்வி உறுதிபாட்டைக் கீழ்க்காணும் அமைப்பில் காணலாம்.

### ஐந்து முக்கிய தளங்கள்

- யுனெஸ்கோ அனைவருக்கும் கல்வியுடன் இணைந்து எல்லா நிகழ்ச்சிகளிலுள்ள செயல்பாடுகளிலும் பங்கேற்றல்.
- அனைவருக்கும் கல்வியை நாடுகளில் நிறுவத் துணைபுரிதல், எ.கா. ஒதுக்கப் பட்டவர்களுக்கான கல்விக் கொள்கையை ஏற்படுத்துதல்.
- நாடுகளுக்கு இடையிலான திறன் மேம்பாடு மற்றும் பரிவர்த் தனையை மேம்படுத்துகிறது.

குறிப்புகள்

- வளங்களை மிகச்சரியான முறையில் பயன்படுத்தவும், அடிப் படைக் கல்விக்கான முதலீட்டை உயர்த்தவும் போராடுகிறது.
- அனைவருக்கும் கல்வி என்ற நிலையை உலகஅளவில் அனைவருக்கும் கல்வி என்று வாதிடும் பன்னாட்டு கூட்டங்களில் நிலைப்படுத்துதல்.
- வயது வந்தோர்களின் படிப்பறிவின்மையைக் குறைத்தல்.
- இளையோர் மற்றும் வயது வந்தோர்க்கான அடிப்படைக்கல்வியை விரிவாக்கம் செய்ய திறன் பயிற்சி அளிக்கப்படவேண்டும்.
- அதிகஅளவில் அறிவு, திறன், மதிப்பு ஆகியவற்றை கையகப் படுத்துதல் ஒவ்வொரு தனி மனித சிறந்த வாழ்வை மேற்கொள்ளப்படுகிறது.
- செயல்திட்டத்திற்கான சில அடிப்படைக் கொள்கைகளை அனைவருக்கும் கல்வி அறிக்கை அளித்துள்ளது.

## யூனிசெப் (UNICEF)

யூனிசெப் என்பது அகில உலக ஒருங்கிணைந்த குழந்தைகளின் அவசரக்கால நிதி உதவியாகும். யூனிசெப் 150க்கு மேற்பட்ட நாடுகளின் அரசாங்கத்திற்கு, உடல்நலம். சத்துணவு, நீர் மற்றும் கல்வியில் பல உதவிகளை செய்து வருகிறது. உடல்நலம், சத்துணவு மற்றும் வெளிப்படுத்தும் உரிமை போன்ற ஒவ்வொரு குழந்தையின் உரிமைகளைப் பாதுகாக்க யூனிசெப் பணியாற்றுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் பாலின வித்தியாசம் சமூக மரபு, சமூகப் பொருளாதாரததில் பின்தங்கிய நிலை அல்லது சூழல் இவற்றிலிருந்து வருபவர்களுக்குத் தரமான கல்வி கிடைக்க யூனிசெப் அயராது பாடுபடுகிறது. பாலின வேற்றுமையின்மை மற்றும் அனைத்து வித வேறுபாடுகளைக் களைதலில் இது தனது கவனத்தைச் செலுத்துகிறது. இதன் புதிய திட்டங்கள் மற்றும் முயற்சிகள் உலகத்தில் மிகவும் பின்தங்கிய குழந்தைகளாகிய ஒதுக்கப்பட்டுள்ளவர், மற்றும் அங்கீகரிக்கப்படாதவர்களுக்கு உதவுகிறது.

பரந்துபட்ட உள்நாட்டு, தேசிய மற்றும் பன்னாட்டு பங்குதாரர்கள் உணரவும் கல்வி மற்றும் பாலின வேற்றுமையின்மை கொள்கைகளை நிலை நிறுத்துவதே மில்லேனியம் வளர்ச்சி கொள்கைகள் மற்றும் அனைவருக்கும் கல்வி என்பதே யூனிசெப்பின் முக்கியப் பணியாகும். இது சமுதாய நீதி மற்றும் அனைவரும் சமம் என்ற நிலையை அடையத் தேவையான முக்கியமான மாற்றங்களை எடுத்து வருகின்றது.

குறிப்புகள்

உலகில் பல குழந்தைகள் இடைநிற்றல் அல்லது குறைவான கல்வியே பெறுகின்றனர். இதில் ஒவ்வொரு குழந்தையின் கனவானது நிறைவேறாமலும், அவர்களின் திறமையானது அறியப்படாமலும் போய்விடுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும், சமமான கல்வி கிடைக்கவும் வளர்ச்சி, மாற்றம், புதுமை, சந்தர்ப்பம் மற்றும் சரிசமமான நிலையை அடையவும் யூனிசெப் ஒரு அடித்தளம் அமைத்துள்ளது. நகர்ப்புறம் அல்லது குக்கிராமங்களில் சோதனை, துயரங்களில் அமைதியற்ற நிலை ஏற்படும் போது அடிப்படையான தரம் குறையாத கொள்கையால் அனைவருக்கும் தரமான கல்வி என்பதை உறுதி செய்கிறது.

## 10.4.3. உலகவங்கி

அனைவருக்கும் கல்வியானது தரம், உலகளாவிய தொடக்கக்கல்வி மற்றும் பிற அனைவருக்கும் கல்வியின் குறிக்கோள்கைளை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்ல உலகவங்கி உறுதுணையாகிறது. வங்கி அனைவருக்கும் கல்வியை ஏறக்குறைய உலகளில் 90 நாடுகளில் பலபரிமாணங்களில் சிறப்பான செயல்பாடுகள் மூலம் செய்ய உதவுகிறது. தொடக்கக்கல்வி பெறுதல், சமஉரிமை, தரமான கல்வி, கற்றல் விளைவுகள் பெறுதல், பெண்கள் இடைநிற்றலுக்கான தேக்க நிலையை குறைத்து, அவர்களது கற்றல் விளைவுகளை முன்னேற்றவும் உதவுகிறது.

- HIV தொற்றால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குக் கல்வி அளிக்க உதவுதல்.
- முன் குழந்தைபருவ வளர்ச்சியை ஊக்கப்படுத்துதல்.
- பல்வேறு நாடுகளில் அனைவருக்கும் கல்வியின் பிரகடனங்களைப் பாதுகாத்தல்.

அனைவருக்கும் கல்வியின் திட்டத்தில் இணைந்து வேலை செய்யும் போது வளரும் நாடுகள் மற்றும் அவர்களின் நன்கொடையாளர் இடையிலான பரஸ்பர உத்திரவாதம் என்பது குறிக்கோளாகிறது. அனைவருக்கும் கல்வியின் குறிக்கோளை அடைய தேவையான வளங்கள் கிடைப்பதற்கு உலக வங்கி உதவுகிறது. மேலும் அனைவருக்கும் கல்வியின் முயற்சிகளுக்கு உலக வங்கியானது பகுத்தறிதல் மற்றும் உலக அறிவை;ப பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் சிறந்த முயற்சிகளுக்கு உறுதுணையாக உள்ளது.

## 10.4.4. பன்னாட்டு முன்னேற்றத்துறை (DFID)

DFID என்பது ஐக்கிய நாடுகள் அரசாங்கத்தின் ஒரு அங்கமாகும். அது வளரும் நாடுகளுடன் இணைந்து வளர்ச்சியை உயர்த்துகிறது. மிகக் கடுமையான வறுமையைக் குறைக்கின்றது.

குறிப்புகள்

## மில்லேனியம் வளர்ச்சி இலக்கு (MDGS)

ஆயிரம் ஆண்டு கால முன்னேற்றத்திற்காக இலக்குகளை (MDGS) அடைய இத்துறை உறுதுணையாகிறது. பன்னாடுகளின் குறிக்கோள்களாகிய உலக வறுமையை 2015க்குள் பாதியளவாகக் குறைப்பதற்கு ஒத்துக் கொண்டுள்ளது. DFID நீண்ட காலத் திட்டங்கள், அரசாங்கம் மற்றும் அறக்கட்டளைகள், வியாபாரம் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் உலக வங்கி உள்ளடக்கியது. ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள் மற்றும் ஐரோப்பிய ஆணையம் ஆகியவற்றுடன் இணைந்து வறுமைக்கான காரணத்தை எதிர்க்க உதவுகிறது.

DFID இந்தியாவில் ஏழை மாநிலங்களுக்கு உதவுகிறது. எ.கா. பீகார், மத்திய பிரதேசம், ஒரிசா மற்றும் மேற்கு வங்காளம். DFID மாநில அரசாங்கத்துடன் இணைந்து குக்கிராமங்கள் மற்றும் நகர்ப்புற சேரிகளில் உள்ள ஏழைகள் வருமானம் பெறவும், சுகாதாரத்துடன் இருக்கவும், கல்வி மற்றும் குடிநீர் மற்றும் கழிப்பறைச் சேவைகள் அடைய பணி செய்கிறது.

DFID முக்கிய பல அடுக்கு பங்குதாரர்கள் உலகவங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, மற்றும் யூனிசெப் இவற்றுடன் இணைந்து நிதிஉதவி அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இது பன்னாட்டு மற்றும் உள்நாட்டு அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடனும். தனியார் நிறுவனங்களாகிய சிறுதொழிற்சாலைகள் முன்னேற்ற இந்திய வங்கி (SIDBI) யுடனும் இணைந்து பணிசெய்கிறது.

## 10.4.5 ஸ்வீடன் பன்னாட்டு மேம்பாட்டு நிறுவனம்

**(Sweedish International Development Agency - SIDA)**

இது ஸ்வீடன் நாட்டின் அரசாங்க நிறுவனம், தொழிற்நுட்ப உதவியும், நிதி உதவியும் உலகம் முழுவதற்கும் வழங்கி வருகிறது. SIDA தனது உதவிகளை தன்னார்வ அரசு சாரா நிறுவனங்கள் வழியாகவும், பலவித நிலைகளில் உள்ள கூட்டுறவு நிறுவனம் மற்றும் ணிஹி மற்றும் ”பன்னாட்டு முன்னேற்ற கூட்டுறவு” என்பதை உயர்த்துவது இதன் முக்கியப் பணியாகும். 100 நாடுகளுக்கும் கூடுதலாக 2,000க்கு மேற்பட்ட செயல்திட்டங்களை ஊக்குவிக்கிறது. ஷிமிஞிகி நிறுவனங்களுடன் பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசாங்கத்துடன் பங்குதாரர்கள் இணைந்து தனது செயல்திட்டங்களைச் செயல்படுத்த விழைகிறது. SIDA ஆப்பிரிக்கா, ஆசியா, தென்அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு ஐரோப்பா போன்ற நாடுகளில் தனது புவியியல் பார்வையைச் செலுத்துகிறது.

இந்தியா 1964ஆம் ஆண்டிலிருந்து ஸ்வீடிஷ் இருதரப்பு மேம்பாட்டு உதவியைப் பெற்றுவருகிறது, SKP (சிஸ்மா சிக்க்ஷா கர்மி திட்டம்) 1987ஆம்

ஆண்டு ஸ்வீடிஸ் பன்னாட்டு நிறுவன உதவியுடன் செயல்பட்டு வருகிறது. ஷிமிஞ்கிவின் மூலம் உதவி பெற்றும் வருகிறது. இச்செயல்திட்டத்தின் நோக்கம், ராஜஸ்தான் மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியிருக்கும் குக்கிராமங்களில் உள்ளவர்களுக்கும் முக்கியமாக பெண் குழந்தைகளுக்குத் தரமான தொடக்கக்கல்வி கிடைக்கவேண்டும் என்பதே ஆகும்.

## 10.5 உலகக் கல்வி மன்றம் – டாக்கர், செனகல் 2000

உலகக்கல்வி கருத்தரங்கில் 155 நாடுகள் மற்றும் 150 நிறுவங்களிடமிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் 2000 ஆண்டுக்குள் அனைவருக்கும் கல்வி தரவேண்டும் என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். அவர்களது கொள்கை என்னவென்றால் குழந்தைகள், இளையோர் மற்றும் மூத்தோர் கட்டாயமாக தங்களது அடிப்படை கற்றல் தேவைகளைப் பெற்றுக்கொள்ள கல்விவாய்ப்பு அமைக்கப்பட வேண்டும் என்பதாகும். அனைவருக்கும் கல்வி என்ற அகில உலக பிரகடனமானது கல்வியில் ஒரு அசாத்தியமான, புதிய பாதை என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இது கற்போரின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்ய செய்யப்பட்ட முடிவு 100 ஆண்டுகளுக்குப்பிறகு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை ஜோம்தியனில் அறியப்பட்டது. 21ஆம் நூற்றாண்டிற்கான பன்னாட்டு கல்விக்குழுவைப் பற்றி யுனெஸ்கோவின் அறிக்கையானது கல்வி 4 தூண்களை உள்ளடக்கியதாக உள்ளது.

- அறிந்துக்கொள்ளக் கற்றல்
- செய்வதற்கான கற்றல்
- வாழ்வதற்கான கற்றல்
- ஒன்று கூடி வாழக்கற்றல்

டாக்கர் கூட்டத்தில் பங்கேற்பாளர்கள் தங்களை அனைவருக்கும் கல்வியின் இலக்குகள் மற்றும் அடைவுகள் அனைத்து குடிமக்களுக்கும் மற்றும் அனைத்து சமுதாயத்திற்குமானது என்பதை அடைய நிறைவேற அர்ப்பணித்துள்ளார்கள்.

## அனைவருக்கும் கல்வியின் இலக்குகள் - EFA

1. முழுமையான முன் குழந்தை பருவத்தின் மீதுள்ள அக்கறை மற்றும் கல்வியை விரிவாக்குதலும், மேம்படுத்துதலும், முக்கியமாக மிகவும் பின்தங்கியும், பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு விரிவாக்கம் செய்வது ஆகும்.

2. 2015க்குள் குறிப்பாக பெண்கள், கடினச் சூழலில் வாழும் குழந்தைகள், பல்வேறு சிறுபான்மையினருக்கு முற்றிலும் இலவச மற்றும் கட்டாய தரமான தொடக்கக்கல்வி கிடைப்பதற்காக வலியுறுத்துதல்.

3. இளையோர் மற்றும் மூத்தோரின் கற்றல் தேவைகள் சரியான கற்றல் மற்றும் வாழ்வியல் திறன்களுக்கான பயிற்சிகள் சரியான வழியில் கிடைக்க உறுதி செய்தல்.

4. 2015க்குள் 50% முன்னேற்றம் முதியோர் கல்வியில் அடைதல். முக்கியமாக பெண்கள் மற்றும் மூத்தோருக்கான அடிப்படை மற்றும் தொடர் கல்வி.

5. 2005க்குள் தொடக்க மற்றும் உயர்கல்வியில் பாலின வேறுபாடுகளை களைதல். 2015க்குள் அனைத்து பாலினத்திற்கான சமமான கல்வியை நிறைவேற்றுதல், பெண்களுக்கான முழுமையான மற்றும் சமமான தரமான அடிப்படைக் கல்வி கிடைப்பதற்கு உறுதி செய்தல், தரமான கல்விக்கான நிலையை முன்னேற்றுதல் மற்றும் உறுதி செய்தல்.

6. கல்வி, கணிதம் மற்றும் அத்தியாவசியமான வாழ்வியல் திறன்களின் மூலம் கற்றல் விளைவுகள் எல்லோராலும் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

## உலக கல்வி மன்றத்தின் குறிக்கோள்

1. அனைவருக்கும் கல்விக்கான வலுவான தேசிய மற்றும் பன்னாட்டு அரசியல் நிலைபாட்டை அளித்தல். தேசிய வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் அடிப்படைக் கல்விக்கான முதலீட்டை மேம்படுத்துதல்.

2. EFAயை வளர்ச்சியடைய செய்தல் என்பது நிலையான மற்றும் வரையறுக்கப் பட்ட கட்டமைப்பாக வறுமையை ஒழிக்கவும் மற்றும் வளர்ச்சி உத்திகளை மேம்படுத்தவும் உதவுகிறது.

3. பிரச்சினைகள், இயற்கைப் பேரழிவுகள், நிலையற்ற தன்மையில் பாதிக்கப்பட்டவர் களுக்கான கல்விக்கான தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் பரஸ்பரம் புரிந்து கொள்ளுதல், அமைதி மற்றும் சகிப்புத்தன்மையை மேம்படுத்துதல், போராட்டம், மோதல் ஆகிய வற்றை தடுக்க உதவுதலுக்கான கல்வியைப் பல நிகழ்ச்சிகளின் மூலம் நடத்துதல்.

குறிப்புகள்

4. கல்வியில் பாலின பாகுபாடின்மைக்கான ஒருங்கிணைந்த வழிகளை மனநிலை, விழுமங்கள் மற்றும் பயிற்சிகளுக்கான மாற்றங்களுக்கான தேவையை அறிந்து நடைமுறைப்படுத்துதல்.

5. எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பிமிக்ஷி/கிமிஞிஷி ஆல் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதை போராடி வெல்ல தேவையான அவசர மற்றும் முக்கிய கல்வியை நடைமுறைப்படுத்துதல்.

6. ஆசிரியர்களுக்கான நிலைபாடு உத்தியோக தருமம் மற்றும் பணித்திறமை மற்றும் மன உறுதியை மேம்படுத்துதல்.

7. அனைவருக்கும் கல்விக் கொள்கையை நிறைவேற்ற தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல்.

8. தேசிய, மாநில மற்றும் பன்னாட்டு அளவில் அனைவருக்கும் கல்வி கொள்கைகள் மற்றும் வழிமுறைகளின் முன்னேற்றத்தை முறையாக கவனித்தல், ஏற்கனவே பல நாடுகளில் வளமான தேசிய வழிகள், தரமான கூட்டுறவு வளர்ச்சிகளால் நிறைவேற்றப் பட்டுள்ளதை அறியலாம். இந்த வழிக்கான முன்னேற்றம் அதிக அளவிலான பன்னாட்டு உதவியினால் உந்தப்படுகிறது. குறைந்த அளவில் மெதுவாக முன்னேறி கொண்டிருக்கும் நாடுகளுக்கு தேவையான அனைவருக்கும் கல்வி என்ற நிலையை வேகமாக அடைய பிற நாடுகள் பன்னாட்டு மற்றும் மாநில அளவிலான உதவிகளை இந்த தேவைக்காக வலியுறுத்துதல். டாக்கர் கட்டமைப்பானது ஒவ்வொரு பன்னாட்டு மற்றும் மாநில குழுவிற்கான தேவைகளுக்கு வலுவூட்டம் அளித்தல்.

அனைவருக்கும் கல்வி 2000 மதிப்பீடு துணை சஹாரன் ஆப்பிரிக்கா, தெற்கு ஆசியா மற்றும் பின்தங்கிய நாடுகளில் எவ்வாறு கல்வி என்பது மிகப்பெரிய சவால் என்பதைக் கோடிட்டு காண்பிக்கின்றது. தேசிய, மாநில மற்றும் பன்னாட்டு கொள்கைகள் உடனடியாகப் புகட்டப்படவேண்டும். நாட்டின் முந்தைய கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவது அந்நாடுகளின் கையில் உள்ளது.

EFA செயல்பாடுகள் நாட்டின் நிலையை பொறுத்து அமைகின்றது. தேசிய EFA மன்றமானது வலுப்படுத்தப்படவேண்டும். EFA யின் கொள்கையை அடைய நிற்க வேண்டும். அந்த நாடுகளில் பற்பல சோதனைகள் அல்லது இயற்கைப் பேரழிவுகள் முக்கிய சவாலாக உள்ளது. பன்னாட்டு அமைப்புகளால் அத்தியாவசியமான தொழிநுட்ப உதவிகள் வழங்கப்படும்.

குறிப்புகள்

## செயல்பாடு 1

கொடுக்கப்பட்டுள்ளவற்றில் மிகச் சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

1. (அ) ஜோம்தியன் மாநாடு பங்கேற்பாளர்களால் உறுதி செய்யப் பட்ட உரிமையானது,

    (a) பாலின சமத்துவம்.

    (b) முதியோர் கல்வி

    (c) ஒவ்வொரு குடிமகனுக்கும்

    (d) HIV/AIDS ஆல் பாதிக்கப்பட்ட குழந்தைக்கான கல்வி.

   (ஆ) ஜோம்தியன் மாநாட்டின் ஐந்து அடிப்படை கொள்கைகள் எவை?

   (இ) ஜோம்தியன் மாநாட்டின் முக்கிய அம்சங்களை விவரி.

2. E-9 நாடுகள் என்பதன் பொருள்.

   (அ) மின்னணு நாடுகள்.

   (ஆ) பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகள்.

   (இ) அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகள்.

   (ஈ) பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடுகள்.

3. கீழ்காண் வினாக்களுக்கு விடையளி

   1. ஜோம்தியன் மாநாட்டிற்கு பின்பு ணி9 நாடுகள் படைத்த சாதனைகள் யாவை?

   2. தெற்காசிய நாடுகளின் தொடக்கக்கல்வியைப் பற்றி விவரிக்க?

## செயல்பாடு 2

வளர்ந்த மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளில் தொடக்கக்கல்வியின் முயற்சிகள் பற்றி உங்களுடன் பணிபுரியும் பணியாளர்களுக்கு சில வல்லுநர்களைக் கொண்டு விவாதம் நடத்துதல்.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

குறிப்புகள்

## 10.6 சுருக்கம்.

- *மக்களுக்குக் கல்வி புகட்டாத எந்த ஒரு நாடும் வெற்றி பெற முடியாது.*
- *கல்வியானது நீடித்த வளர்ச்சிக்கு ஒரு திறவுகோலாகவும் மற்றும் வறுமையைக் குறைக்கக் கூடிய ஒன்றாகும்.*
- *அடிப்படைக்கல்வி என்பது வாழ்நாள் கற்றலுக்கு ஒரு அடித்தளமாக அமைந்துள்ளது. 21ஆம் நூற்றாண்டில் கல்வி புகட்டுதலுக்குத் தொடர்ந்து கற்றல் ஒரு திறவுகோலாக உள்ளது. இது வழக்கமான பிரிவுகளான வயது மற்றும் கல்வி நிலைகளைத் தகர்க்கிறது.*
- *பள்ளி மற்றும் பள்ளிக்கு வெளியேயான கல்விகளில் முறையான மற்றும் முறைசாராக்கல்விக்கு இடையேயான வழக்கமான வேறுபாடுகளையும் இது மேம்படுத்துகிறது மற்றும் கல்வி வேலைகளுக்கு இடையேயான வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு இது செல்கிறது.*

## 10.7 அருஞ்சொற்பொருள் / சுருக்கச்சொல்

- ADEA Association for the Development of Education in Africa
- AfDB African Development Bank
- CDF Comprehensive Development Framework
- CREMIS Caribbean Regional Educational Management Information System
- DFID Department for International Development
- ECCD Early childhood care and development
- EU European Union
- FRESH Focusing Resources on Effective School Health
- EFA Education for All
- HIPC Highly Indebted Poor Countries Initiative
- HIV Human Immunodeficiency Virus
- IBE UNESCO International Bureau of Education
- ICT Information and communication technologies

**International Scenarios in Elementary Education**

**Block -3 : Elementary Education in India in the Contemporary Context-II**

**Notes**

குறிப்புகள்

- IIEP UNESCO International Institute for Educational Planning
- NGO Non-governmental organization
- OIE Organization of Ibero-American States for Education, Science and Culture
- SIDA Swedish International Development Co-operation Agency
- UNAIDS Joint United Nations Programme on HIV/AIDS
- UNDAF United Nations Development Assistance Framework
- UN/DESA United Nations Department of Economic and Social Affairs
- UNDP United Nations Development Programme
- UNESCO United Nations Educational, Scientific and Cultural Organization
- UNFPA United Nations Population Fund
- UNGEI United Nations Girls' Education Initiative
- UNICEF United Nations International Children's Emergency Fund
- WGEFA Working Group on Education for All
- WHO World Health Organization

## 10.8 மேற்கோள்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்.

**[SUGGESTED READINGS & REFERENCES]**

**Conference Documents and Papers**


- World Education Forum (= WEF). Dakar, Senegal, 26-28 April 2000. The Dakar Framework for Action. Education for All: Meeting our Collective Commitments. www2.unesco.org/wef/en-leadup/dakfram.shtm
- World Education Forum. Address by Koichiro Matsuura, Director General, UNESCO. www2.unesco.org/wef/en-news/coverage_speech_jihiro.shtm

- World Education Forum. James D. Wolfensohn, President, The World Bank. Presentation at the WEF. www2.unesco.org/wef/en-news/coverage_speech_wolfen.shtm
- World Education Forum. Renewed Hope: NGOs and Civil Society in Education for All. Executive Summary (Press Release) of the NGO Study by the Press and Information Office of the Dakar Meeting (= NGO Study). www2.unesco.org/wef/en-leadup/findings_ngo.shtm
- World Education Forum: NGO Declaration on Education for All, Dakar 25 April 2000. 4 pages


**Notes**

**International Scenarios in Elementary Education**

**Diploma in Elementary Education (D.El.Ed)**


- World Education Forum. Strategy Session "Literacy for All: A Renewed Vision for a Ten-Year Global Action Plan", Dakar, 27 April 2000 and: Draft of a Resolution for a UN Literacy Decade
- World Education Forum. Statistical Document. UNESCO Institute for Statistics, Paris 2000
- Education for All - Global Synthesis by Malcolm Skilbeck. EFA International Consultative Forum Documents. EFA Forum UNESCO, Paris 2000
- EFA Thematic Study on Community Partnership in Education: Dimensions, Variations, and Implications, by Marc Bray. January 2000. Comparative Education Research Centre, The University of Hong Kong, Pokfulam Road, Hong Kong, China
- EFA Thematic Study on Funding Agencies' Contributions to Education for All, by Clare Bentall, Edwina Peart, Roy Carr-Hill, and Aidan Cox. February 2000. Overseas Development Institute, London, Portland House, Stag Place, London SW1E 5DP. www.oneworld.org/odi
- EFA Thematic Study on Literacy and Adult Education. Prepared by the International Literacy Institute, Principal Author Daniel Wagner. March 2000. University of Pennsylvania - UNESCO. 3910 Chestnut Street, Philadelphia, PA 19104-3111. www.literacyonline.org
- Mid-Decade Meeting of the International Consultative Forum on Education for All, 16-19 June 1996, Amman, Jordan. Final Report. EFA Forum Secretariat UNESCO, Paris 1996

- World Conference on Education for All (= WCEFA), 5-9 March 1990, Jomtien, Thailand. World Declaration on Education for All and Framework for Action to Meet Basic Learning Needs. Published by the Inter-Agency Commission. UNICEF House, New York, N.Y. April 1990
- Fifth International Conference on Adult Education (= CONFINTEA V), 14-18 July 1997, Hamburg, Germany. Declaration on Adult Learning. UNESCO Institute for Education, Hamburg 1997

**Other Related Publications**

- Bhola, H.S., Evaluating Literacy for Development. Projects, Programs and Campaigns. UNESCO Institute for Education, Hamburg; German Foundation for International Development, Bonn 1990
- Torres, Rosa María, One Decade of Education for All: The Challenge ahead. International Institute for Educational Planning (UNESCO/ IIEP), Buenos Aires 2000
- Publications on Dakar by/on the World Education Forum in the Internet under www2.unesco.org/wef

**International Scenarios in Elementary Education**

**Block -3 : Elementary Education in India in the Contemporary Context-II**

**Notes**

- Hard copies can be ordered from UNESCO -http://www.unicef.org/mdg/index_unicefsrole.htm
- For Elementary Education initiative at International level-http://unesdoc.unesco.org/images/0012/001228/122850e.pdf


## 10.9 வினாக்கள்

1. உலகக்கல்வி மன்றத்தின் நோக்கங்கள் பற்றி விவாதிக்க?
2. உங்களுடைய கருத்துப்படி UEE-இல் உள்ள ஜோம்தியன் மாநாட்டின் விளைவுகள் என்ன?
3. ஹிணிணிஇல் UNESCO வின் பங்கு என்ன?
4. UEEஇல் உலகவங்கி SIDA, DFID ஆகியவற்றின் பங்கு என்ன?
5. 2000ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கல்வி மற்றும் டக்கார் (சினேகல்)லில் எடுக்கப்பட்ட முக்கிய பிரச்சினைகள் பற்றி விரிவாக விவரி?